பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீராது

www.padippakam.com

# பெண் குரல்

மே - டிசம்பர் - 1996



உலக அழகி போட்டியை எதிர்த்து
நடைபெற்ற ஊர்வலம்.

படிப்பகம்

www.padippakam.com

'பெண் உரிமை'

2-6

3-1

மே - திசம்பர்

1996

தனிச்சுற்றுக்கு மட்டும்

நன்கொடை :

உரூபா. 4.00

ஆண்டு சந்தா ரூ. 30.00

வெளியீடு :

தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம்

இதழின் தொடர்புக்கு :

அஜிதா

45, பொன்னியம்மன் மேடு
வாசுதேவர் முதலியார் தோட்டம்
சென்னை – 110

## உள்ளே ...

நிலவிவரும் திருமணங்களைப் பற்றி ... 5

நிஜங்கள் ... 8

மாபெரும் புரட்சியாளர் சியாங்சிங்கின் வாழ்க்கை பயணம் ... 9

அனுமதி ... 13

நான்கு வயது சிறுமிக்கு நேர்ந்த கொடுமை. ... 14

ரூப்கன்வார் வழக்கில் நீதி மன்றத்தில் ஆதிக்க வெறி அம்பலம்! ... 14

சட்டசபையில் போராட்டம் ஏன்? ... 10

தொடரட்டும் உங்கள் புரட்சி ... 21

சங்கமாவோம்! சதியை வெல்வோம்! ... 22

சீரழிக்கும் 'உலகி அழகிப் போட்டி! ... 26

சாராய வியாபாரியின் காட்டு மிராண்டித்தனம் ... 31

பழிதீர்க்க ... 32

புலான் தேவி திரைப்பட விமர்சனம் ... 33

எதிர்காற்று ... 36

படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக

அன்பார்ந்த நண்பர்களே!

சென்ற இதழில் வெளியான பல்வேறு போராட்டச் செய்திகள் உங்களை உற்சாக மூட்டியுள்ளதை அறிந்தோம். இந்த இதழ் பல்வேறு கோணங்களில் செழுமைப்படுத்தப் பட்டு வெளி வருகிறது. உங்களின் தொடர்ச்சியான ஆதரவையும், ஊக்குதல்களையும் 'பெண் உரிமை' நாடுகிறது.

நண்பர்களே! நமது நாட்டில் தொலைக்காட்சி சினிமா பத்திரிகை போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் அங்கிங்கெனாதபடி எங்கும், எதிலும் ஆபாசத்தை கட்டவிழ்த்து வருகின்றன. இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 15-ஆம் தேதியிலிருந்து பன்னாட்டு தொலை காட்சி நிறுவொனமொன்று (குளோபல் இண்டர்நெட் லிமிடெட்) 'ப்ளஸ் 21' என்ற நீலப்பட சானலை அறிமுகப் படுத்த இருந்தது. இந்த சானல் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற பெயரிலும் பாலியல் குறித்த விழிப்புணர்வுக்கான சானல் என்ற பெயரிலும் முழுக்க முழுக்க வக்கிரமான் திரைப்படங்கள் மற்றும் நிகழச்சிகளை தொகுத்து வழங்க உள்ளது. இது மக்கள் மீது தொடுக்கப் படும் மூர்க்கமான பண்பாட்டு யுத்தமாகும். ஒரு வகையில் பண்பாட்டு பயங்கரவாதமே.

இதன் மூலம் ஏற்கனவே அரை ஆபாசமாக உள்ள கலை இலக்கியங்கள் அனைத்தும் முழு ஆபாசமாக்கப்பட்டு வக்கிரமே மனித மனங்களின் நியதியாக்கப்பட திட்டமிடப்பட்டுள் ளது. ஏற்கனவே மேற்கத்திய நாடுகள் மூலம் திணிக்கப்படும் பண்பாட்டு வடிவங்களான பாடல்கள், இசை மற்றும் திரைப்படங்கள் அனைத்திலும் வன்முறை உணர்வுகளும் பாலியல் வக்கிரங்களுமே மேலோங்கி உள்ளன. இவை ஏற்கனவே, ஆண்-பெண் உறவை சித்தரிக்கும் மக்களின் வளமையான மொழியை சிதைத்து ஒழுங்கற்ற, ஒழுக்கக் கேடான புதிய உதிரித்தனமான மொழி வடிவங்களைத் திணித்து உச்சமாக, இப்போது அறிமுகப்படுத்தபட்டுள்ள 'ப்ளஸ் 21' சானல் ஆபாசத் திணிப்பின் அபாயத்தை முனனெப்போதும் விட நமக்கு உணர்த்துகிறது.

மேற்கத்திய நாடுகள் தொடுத்து வரும் பண்பாட்டு தாக்குதலில் பெண் ணின் உடல் போகப் பொருளாகவும் நுகர்வுப் பொருளாகவும் அவளின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றையுமே வக்கிரமான முறையில் வணிகமய மாக்கிவிட்டன. இதன் மூலம் அவர்கள் நிலவுடமை மற்றம் ஆணாதிக்கப் பண்பாட்டை உறுதிப்படுத்தி வருகின் றனர்.

இந்த ஆபாச பண்பாட்டு யுத்தத்தின் பின்னணியை ஆராய்ந்தோமெனில் அதிகரித்து வரும் பசி, பட்டினிச்சாவு, அடிப்படை வசதியின்மை, வேலை யில்லாத் திண்டாட்டம், கடைச்சரக்காகி வரும் கல்வி என நீண்டு கொண்டே போகும் வாழ்வுரிமை போராட்டங் களிலிருந்து மக்களை திசைதிருப்பி அவர்களின் மனித நேய உணர்வுகளை சிதைத்து தங்களுடைய விடுதலைக் கான போர்குணத்தை மழுங்கடிக்கவே மேற்கத்திய நாடுகள் திட்டமிட்டே இந்த ஆபாச பண்பாட்டு தாக்குதல் களை தொகுத்துள்ளதைப் புரிந்து கொள்ளமுடியும்.

இந்த ஆபாச அபாய சீரழிவைத் தடுக்கும் வகையில் த.பெ. க தமது ஆபாச எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் பல மட்டங்களில் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஆகஸ்ட் 5-ந்தாம் நாளை ஆபாச எதிர்ப்பு நாளாக பிரகடனப்படுத்தி உள்ளது. ஆபாச பண்பாட்டை எதிர்க்கும் வகையில் பெண்ணை இழிவாக பார்க்கும் சட்டசபையிலும் ஆபாசத்தை தடை செய்யக்கோரி பல முனைகளில் போராடி வருகிறது. மக்களை படு குழிக்குத் தள்ளும் ஆபாச பண்பாட்டை எதிர்த்து மக்கள் ஜனநாயகப் பண் பாட்டை படைக்க த.பெ.க, பண்பாட்டு அமைப்புகளுடன் இணைந்து கூட்டமைப்பாகவும் செயல்படுகிறது. மேலும், சமுதாயத்தை சீரழிக்கும், பெண்ணை இழிவு படுத்தும் ஆபாச பண்பாட்டை வேரோடு ஒழித்திட மேலைநாட்டு பண்பாட்டை அடியோடு வீழத்தி எறிய நாம் அனைவரும் ஓரணியில் திரள, த.பெ.க தமிழக மக்களை அறை கூவி அழைக்கிறது. 'போராட்டம் இல்லாது போகாது துன்பங்கள்' என்ற போர் முழுக்கத்துடன் தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொள்வோம் வெற்றி பெறுவோம்.

ஆசிரியர் குழு

நண்பர்களே!

கடுமையான பொருளாதார இக்கட்டால் நான்கு இதழ்களையும் தொகுத்து ஒரு இதழாகக் கொண்டுவந்துள்ளோம். நீண்ட கால இடைவெளியில் 'பெண் உரிமை வெளிவருவதை எண்ணி மிகவும் வருந்துகிறோம்! ஆனால் இனியும் இது போன்ற இடைவெளி இல்லாமல் வெளிவரும் என்று உறுதியேற்கிறோம்!

– ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# நிலவிவரும் திருமணங்களைப்பற்றி...

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதில்லை! வர்க்கத்தில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன!

வர்க்கங்களற்ற புராதன காலத்தில் மக்கள் வேட்டையாடி பிழைத்துக் கொண்டிருந்தபோது பெண்ணே தலைவியாக மதிக்கப்பட்டு இருந்தாள். பின்னாளில் சமூகம் . வர்க்கமாக பிளவுபட துவங்கியதிலிருந்து, பெண்ணை 'திருமணம்' என்ற இழிவான சடங்கின் மூலம் குடும்பம் என்ற கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பல்வேறு தரப்பட்ட அடிமைத் தனத்திற்கு உள்ளாக்கப்பட்டு பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாள். இந்த பிற்போக்குத்தனமான ஆணாதிக்க சமூக அமைப்பின் வீச்சாகவே இன்றைய திருமணச் சடங்குகள் நிலவி வருகின்றன.

ஆம்! இன்றைய ஆணாதிக்க சமூகம் பெண்ணைப் போகப் பொருளாகவும் , பிள்ளை பெறும் இயந்திரமாகவும் உருமாற்ற திருமணத்தை ஒரு கருவியாக பயன்படுத்துவதோடு அவளுடைய உழைப்பை சுரண்டுவதற்கான ஒரு வழியாகவும் பயன்படுத்துகின்றது. இன்றைய நடைமுறையில் பெண் பல்வேறு தரப்பட்ட திருமண முறைகளால் அடிமைப்படுத்தப்படுவதோடு மிகுந்த கொடுமைகளுக்கு உள்ளாக்கும் திருமணங்களைப் பற்றி அலசி பார்ப்போம்.

இன்றுள்ள பெரும்பான்மையான திருமணங்கள் பெற்றோர்களால் நிர்ணயிக்கப்படும் திருமணங்களே. இது சடங்கு என்ற மூடநம்பிக்கையாலும் வரதட்சிணை என்ற பெயரில் பெண்ணை சந்தை மாடு போல் விற்கும் வியாபாரமாக இன்று நிலவி வருகிறது. பெண்ணைப் பெற்றவர்கள் அவளை 'சிறுவயது முதலே நீ பெண் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று கூறி அவளுக்கு தன்னம்பிக்கையை கொடுப்பதற்கு பதிலாக அவளுடைய எதிர்கால வாழ்க்கையை பார்த்து பயப்படும்படி வளர்க்கின்றனர். பெண் வளர்ந்த பிறகு திருமணம் என்ற பெயரில் அறிமுகம் இல்லாத ஒரு ஆணுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்கின்றனர். அது மட்டுமல்லாது, இன்றைய நவ நாகரீக முறையில் உள்ள பொருட்களை அவன் வரதட்சணையாக கேட்பதும், பெண்ணின் விருப்பத்தை மதிக்காமல், அவளை எப்படியாவது அவனுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் முயல்கின்றனர்.

இன்றைய சமூகத்தில், பெற்றோர்களால், பார்க்க வரும் மாப்பிள்ளை வீட்டாருக்கு முன் பெண் அலங்காரம் செய்யப்பட்டு ஒரு கண்காட்சி பொம்மையாக திருமணச் சந்தையில் நிற்க



படிப்பகம்

www.padippakam.com

வைக்கப்படுகிறாள். பின்னர் திருமண நாளன்று 'ஐயர்' என்று சொல்லப்படும் பார்ப்பனனால், "நீ இதுவரை இந்திரனுக்கு ஒரு நாள் மனைவியாக, பின் தேவர்கள் அனைவருக்கும் மனைவியாகி பின் எனக்கு மனைவியாகி இப்பொழுது நான் உன்னை இவனுக்கு மனைவியாக்குகிறேன்" என்ற பொருள்படும்படியான சமஸ்கிருத மந்திரத்தை சொல்லி அவளை 'வேசி' என்று சொல்லாமல் சொல்லி தூக்கு கயிறான மஞ்சள் கயிறை கொடுத்து ஆணுக்கு அடிமையாக்கப்படுகிறாள். இந்த அடிமைச் சடங்கிற்கு பின்பு மனைவி என்ற பட்டம் கொடுக்கப்பட்டு குடும்பம் என்ற நான்கு சுவருக்குள் ஒடுக்கப்படுகிறாள். அவளுடைய உழைப்பும் சுரண்டப்படுகிறது.

இதற்கு அடுத்தப்படியாக, காதல் திருமணங்கள் இன்றைய நாகரீக சமூகத்தில் அதிகரித்து வருகின்றன. ஆனால், காதல் திருமணங்கள் கூட ஒருவரையொருவர் புரிந்து விட்டுக் கொடுத்து, மணம் ஒத்துப் போய் வாழும் வாழ்க்கையல்லாமல், சினிமாவில் பார்ப்பது போல் காதல் என்பதன் அர்த்தம் மோகம்தான் என்ற தவறான புரிதலின் பேரில் பல திருமணங்கள் நடக்கின்றன. காதலிக்கும்பொழுது உன்னை கண் கலங்காமல் பார்த்துக் கொள்கிறேன்' என்பது போல பல சினிமாடயலாக் பேசுவது, சினிமாவை பார்த்து இப்படி நம் வாழ்க்கையும் அமைய வேண்டும் என்ற ஆசை வேறு அதிகம். திருமணமான பிறகு, கணவனுக்கு கீழ் பணிய வேண்டியுள்ளது. இதில் இருவரின் புரிதல் என்பது இல்லை. அதற்கு பதில் ஆதிக்கத்தன்மையே வெளிப்படுகிறது. மேலும் காதல் திருமணங்களில் பெரும்பாலானவை 'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்' என்பது போல் அமைகின்றன. ஏற்கனவே திருமணமானவர்கள், திருமண உறவிற்கு அப்பால் . பல பெண்களுடன் முறையற்ற வகையில் உறவு கொள்வதும் அவர்களின் 'உன்னை நான் உயிருள்ள வரை விடமாட்டேன்' என்ற வாசகங்களை நம்பி இளம்பெண்கள் ஏமாறும் போக்கு அதிகரித்தும் வருகிறது.

பெற்றோர்களால் நடத்தப்படும் திருமணம் காதல் திருமணம் மட்டுமல்லாது சீர்திருத்த திருமணங்களாக நிலவி வருகின்றன. 1940-45களில் சுய மரியாதை திருமணங்கள் மூலம் சிறு வயது திருமணத்தையும், சடங்கு முறை திருமணத்தையும் எதிர்த்து பிரச்சாரம் செய்தார் பெரியார். அதாவது பார்பானியர் ஓதும் சமஸ்கிருத மந்திரமும், தீ மூட்டி அதை வலம் வரும் சடங்குகளையும் தூக்கியெறிந்து மாலைகளை மட்டும் மாற்றிக் கொள்ளும் சுயமரியாதை திருமணத்தை நடத்திக் காட்டினார். இருவரது விருப்பம், அறிவு, வளர்ச்சி, அனுபவம், இருவரின் அன்பு ஆகியவையே ஒரு திருமணத்தின் முக்கியப் பங்காகும் என்பதே பெரியாரின் கருத்தாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த திருமணத்தில் 'தாலி' என்பது பெண்ணை அடிமையாகவும் அவளை வெளிவராமல் தடுக்கும் விலங்காகும் என கூறி தாலி இல்லாமல் மாலை மாற்றும் திருமணமாக நடந்தது. பெரியார் மறைந்த பிறகு திராவிடர் இயக்கம் இதை சரியான முறையில் கொண்டு போகாததால் இத்திருமண முறையே நடைபெறாமல் உள்ளது. இன்று நடக்கும் சீர்திருத்த திரு மணங்கள் மேடையில் மாலை மாற்றியும் மறைவில் தாலி கட்டிக் கொண்டு வரதட்சணை வாங்கியும் நடைபெறுகின்றன.

இதே திருமண முறையே பெண் விடுதலையைப் பற்றி வாய்கிழியப் பேசும் (கம்யூனிசக் கட்சி என்று கூறிகொள்ளும்) சில அமைப்புகள் இதை தவறாகப் பயன்படுத்தி தமிழர் திருமண முறை என்று தவறான பிரச்சாரம் செய்து அவர்களுக்கு சாதகமான அதே பழைய அடிமைத் தனத்தின் சடங்கு முறைகளைக் கொண்டே திருமணத்தை நடத்தி அதற்கு 10 பக்க விளக்கமும் தந்து மக்களை படுமோசமாக ஏமாற்றி வருகின் றனர்.

மேற்கூறிய திருமண முறை களில், சட்ட ரீதியாக பதிவு செய்யப்படும் திருமணம் உட்பட குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கை யில் அநேக திருமணங்கள் தோல்வியடைந்து இன்றைய குடும்ப நல நீதிமன்றங்களில் விவாகரத்துக்காக அணிவகுத்து நிற்பதை நம் கண் முன்னால் பார்க்க முடிகிறது. இத்திருமணங்கள் மூலம் வாழ்க்கையை நடத்த கூடிய சரியான புரிதலையும் மனப் பக்குவத்தையும் ஆண்-பெண் இருவருக்கும் ஏற்படுத்திவிட முடியாது என்பதைத்தான் இந்த அணிவகுப்புகள் அம்பலப்படுத்து கின்றன.

உண்மையில் இந்த திருமணம் என்ற வார்த்தையே ஒரு பெண் ணடிமைச் சொல்லே! இதற்கு மாறாக ஒரு பெண்ணும் ஆணும் சரிபாதியாக இணைந்து வாழ்க்கை யை மேற்கொள்வதை கூறும் விதமாக 'இணை ஏற்பு விழா' என்று கூறுவதே சரியாக அமையும். இந்த இணை ஏற்பு விழாவில் இன்று நிலவி வரும் சாதி, மதம், சடங்கு சம்பிரதாயங்களை தூக்கி யெறிந்து பொருளாதாரத்தை மைய மாக கொண்டு சார்ந்திருப்பதின்றி, ஒருவரையொருவர் முழுமையாக புரிந்து கொண்டு சமூக மாற்றத் திற்கு தங்களை அர்ப்பணிக்கவும் ஆண் - பெண் சமத்துவ சமூதாயத் தைப் படைக்க உறுதியேற்கும் ஒரு விழாவாக அமைய வேண்டும்.

இப்படிப்பட்ட இணை ஏற்பு மணங்களால் மட்டுமே பெண்ணை இழிவுப்படுத்தும் பண்பாடுகளை உடைத்தெறியவும் வரதட்சனை கொடுமைகளை ஒழிக்கவும் காதல் என்ற போலி சடங்குகளை உடைக்கவும் குழந்தைத் திரு மணத்தை ஒழிக்கவும், பெண் ணடிமை தனத்தை தூள் தூளாக்கி, பெண் விடுதலையையும் சமூக விடுதலையையும் பெறமுடியும்.

சூர்யா.



படிப்பகம்

www.padippakam.com

# நிஜங்கள்

நான் ஒரு முறை இக்
கட்சிக்கு வந்தேன்! - அடடே!
ஆயிரம் முறை - இல்லை!
கோடி முறை
அதோ,
வரதட்சிணைக் கொடுமைக்கு எதிராக
பெண்கள் கூட்டம் வருகிறது.
அதில் சேர ஆசை
ஆனால்
கை, காலில் விலங்கு
பூட்டி இருக்கிறார்கள்!
வரதட்சிணை பேய்கள்!
வரதட்சிணை பேய்களுக்கு தெரியாமல்
பெண்கள் கூட்டத்தில் சேர்ந்தேன்.
கூட்டம் முடிந்தும்
மகிழ்ச்சி பொங்க
வீட்டிற்கு சென்றேன்.
வீட்டிற்குள் செல்ல பேய்களின்
அனுமதி கிடைக்கவில்லை.
ஆனால்,
மனம் நோகவில்லை!
மனம் கஷ்டப்படவில்லை!
அப்போதுதான் நினைத்தேன்
என்னைப் போல்
எத்தனைப் பெண்கள்?
இவர்களின் விலங்கை உடைக்க
இப்புரட்சிகர அமைப்பில் சேர்ந்தேன்.
அனைத்து பெண்களின்
விலங்கை உடைக்க
அனைவரையும் அழைத்தேன்.
நிஜங்கள்! நிஜம்! நிஜம்!

சிநேகா.
(பத்தாம் வகுப்பு மாணவி)


படிப்பகம்

www.padippakam.com

# மாபெரும் புரட்சியாளர் சியாங்சிங்கின் வாழ்க்கை பயணம்...

*சீன* மக்களின் நல்வாழ்வுக்காகவும் உயரிய கம்யூனிச லட்சியங்களுக்காகவும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர்தான் *சியாங் சிங்.*

*சீன* மக்களின் அன்புத் தலைவர் தோழர் மாவோவின் தோளோடு தோள் நின்று அந்நாட்டின் புரட்சியிலும், புரட்சிக்குப் பிந்தைய சோசலிச *சீனத்தில்* நடைபெற்ற மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியிலும் சீரிய பங்காற்றி உலக மக்களுக்கே ஒளி விளக்காய் திகழ்ந்தவர்தான் *சியாங் சிங்.* இறுதி வரை எவ்வித சமரசமுமின்றி புரட்சியாளராகவே வாழ்ந்த *சியாங் சிங்கின்* வரலாறு ஒடுக்கப்பட்ட மக்கள், மற்றும் பெண்களாகிய நமக்கு எப்போதுமே உத்வேகம் ஊட்டக்கூடிய முன்னுதாரணமாக இருக்கிறது.

புரட்சிக்கு முந்தைய அன்றைய *சீனம்* பல்வேறு கொடூரமான நிலபிரபுக்களாலும் மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்தது. அந்நாட்டின் பெரும்பான்மையான பெண்களின் நிலையோ கற்பனைக் கெட்டாத வகையில் அடிமைத்தனமாய் இருந்தது. எவ்வித உரிமையின்றி அடிமைகளாய் இருந்த அன்றைய *சீனப்* பெண்கள் அழகுப் பதுமைகளாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களின் உடல் வளர்ச்சி மிருகத்தனமான முறையில் இரும்புத் தலைகளாலும் மரக்கட்டையாலும் ஒடுக்கப்பட்டது. உதாரணமாக அன்றைய நாளில் பெண்களின் பாதங்கள் நீளமாக வளரக்கூடாது என்பதற்காகவே இரும்புத் தளைகளை வைத்துப் பாதங்களை இறுகக் கட்டினர். இத்தகைய கொடுமையை எதிர்கொண்டு வளர்ந்தவர்தான் *சியாங் சிங்.*

*மிக* ஏழ்மையான கிராமிய கைவினைஞர் குடும்பத்தில் 1914-ஆம் ஆண்டு பிறந்த அவர் அப்போது நடந்த முதல் உலகப் போரில் நேரடியாக எதிர்கொண்டு மிகவும் துயர்மிக்க அனுபவங்களைப் பெற்றார். வண்டிச் சக்கரம் செய்யும் அவரது தந்தை வறுமையில் வாடும்போதெல்லாம் அக்கோபத்தை தனது மனைவியிடம் காண்பித்தார். மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கடி அடித்து நொறுக்குவார். *சியாங்சிங்கின்* அன்னை மனம் வெறுத்து, நிலப்பிரபு ஒருவரிடம் பண்ணையாளாக வேலைக்குச் சேரும் வரை இக்கொடுமைத் தொடர்ந்தது. தனது இளமையை முழுவதும் பட்டினியால் கழித்த *சியாங் சிங்* எப்படியோ சாதுரியமாக பள்ளி சென்று கற்க மட்டும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டார். அப்போது குடும்பத்தில் மட்டுமல்ல ஆணாதிக்கக் கோரப் பிடியானது பள்ளியிலும், அவர் கற்ற கல்வியிலும் எல்லா இடங்களிலும் மூச்சுவிடாமலேயே நசுக்கியது. ஆணாதிக்க கல்வியான அதிகாரத்திற்கு கட்டுப்படுவது என்ற கன்ப்யூசியசின் நல்லொழுக்கப் பாடத்தை அப்போதே அவர் முழுமையாக வெறுத்தார்.

ஆணாதிக்கத்திற்கும், நில உடைமைக்கும் எதிராக மனதில் கனலை ஏந்தி வளர்ந்த *சியாங்சிங்* தனது 15-வது வயதில் நாடகத்தில் நடிப்பதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். மிகச்



படிப்பகம்

www.padippakam.com

சிறந்த நாடக நடிகையாக மிளர்ந்த அவர் 1931 ஆம் ஆண்டு ஜப்பான் சீனத்தின் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தபோது இடதுசாரி கருத்துக்களால் ஈர்க்கப்படும் வாய்ப்பைப் பெற்றார். தனது தாய்நாடு, வெளிநாட்டினரால் ஆக்கிரமிக்கப் படுவதற்கெதிராக தெளிவான நிலையை எடுத்தார். சீன கம்யூனிச கட்சி எடுத்திருந்த இடது சாரி நாடகக் கலைஞர் அணியில் இணைந்தார். அப்போது முதல் அவர் லெனின் நூல் களைப் படிக்கத் துவங்கினார்.

திரைப்படத்திலும் நடிக்கத் துவங்கிய அவர் அன்றைய சீனத்தி லுள்ள சாங்கை நகரில் பெண்களுக்கு அதிலும் குறிப்பாக நடிகை என்றாலே ஏவி விடப்படும் அனைத்து அவமானங் களையும், ஏளனங்களையும் சியாங் சிங் எதிர்கொண்டார். பெண் விடுதலைக்காக அப்போது கலை இலக்கியங்களைப் படைத்து வந்த லூசின் படைப்புகள் அவருக்கு ஊக்கத்தைத் தந்தது. ஜப்பானிடமிருந்து சீனத்தைக் காப்பாற்றுங்கள் என்ற கருத்தில் சாங்கையில் நடத்தப்பட்ட முற்போக் கான நாடகமொன்றில் பிரதான வேடமேற்று நடித்ததற்காக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டார். அந்த சிறையனுபவம் அவருக்கு அரசியல் வாழ்வு குறித்து பல அனுபவங்களைக் கற்றுக் கொடுத்தது.

பின்னர் சீனத்தை விடுவிக்க நடந்த உலக வரலாற்று சாதனையான 'நீண்ட பயணத்தில்' பங்கேற்றார். பயணம் முடிந்ததும் யேனானில் இருந்து தோழர் மாவோவின் மாணவராகவும் சகத் தோழராகவும் மார்க்சிய லெனினியத்தை கற்கும் அறிய வாய்ப்பைப் பெற்றார். இந்த இரு மகத்தான புரட்சியாளர் களுக்கிடையே அரும்பிய தோழமை யுறவு காதலாக மலர்ந்து திருமணத்தில் முடிந்தது. 1938-ல் மாவோவின் இணையாக, புரட்சிகர வாழ்க்கையில் சியாங்சிங் இணைந்து கொண்டார்.

இவ்வாறு இணைந்த சியாங்சிங் 38 வருடங்கள் மாவோவின் தோளோடு தோள் நின்று சீன மக்களின் நல்வாழ்விற் காகவும் பாட்டாளி வர்க்க லட்சியங் களுக்காகவும் இறுதிவரை எதிரிகளுடன் போரிட்டார். முதலாளித்துவ வரலாறு களை படிப்பவர்கள் மாவோவின் மனைவி என்பதாலேயே அவருக்கு இத்தகைய இடம் சீனத்தின் வரலாற்றில் கொடுக்கப்படுவதாகத் தவறாகப் புரிந்து கொள்வர். ஆனால் உண்மை அப்படி யல்ல. சியாங்சிங்கின் அரசியல் வாழ் வில் துவக்க காலம் துவங்கி அவரின் இறுதி நாட்கள் வரை அவருடைய வரலாற்றைப் படிக்கும் எவரும் அவர் எத்தகைய சமரசமுமில்லாதப் புரட்சி யாளர் என்பதையும், மார்க்சிய லெனினியத்தை அவர் ஆழமாகக் கற்று மேன்மை பெற்றிருந்ததையும் ஆணாதிக் கம் உட்பட அனைத்து வகை ஆதிக்கங் களையும் ஒழித்துக் கட்ட இயல்பாகவே உயிர்துடிப்புள்ளவராக இருந்ததை அறிய முடியும்.

சீன நாட்டின் சோசலிச புரட்சி முடிந்த பின் ஏற்கனவே இருந்த பழைய சமுதாயத்தின் சக்திகள், சோசலிசத்தின் எதிரிகள் ஆகியோர் எப்போதுமே புதிதாக மலர்ந்த சோசலிசத்தை ஒழிக்கத் தீவிரமாக பல வழிகளில் முயற்சித்தனர். கருத்து ரீதியாகவும், சதிகள் மூலமாகவும் போர்கள் மற்றும் வன்முறை மூலமாக வும் சீன சோசலிச கட்டுமானத்தை அழிக்க முயற்சித்தனர். சோசலிசத்தைக் காப்பாற்ற தொடர்ந்து இத்தகைய


படிப்பகம்

www.padippakam.com

எதிரிகளைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் மூலமாக ஒழிக்க வேண்டும். எனவே தொடர்ந்து வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் மூலமே சீன சோசலிச சமுதாயத்தை, போராட்டத்தை நடத்த வேண்டுமென்று மாவோ இடைவிடாது வலியுறுத்தினார்.

சீன கம்யூனிசக் கட்சிக்குள்ளேயே முதலாளிகளின் பிரதிநிதிகள், முதலாளித்துவ திட்டங்களையும், கொள்கைகளையும் முன்வைத்தனர். இதனைப் புரிந்து கொண்ட மாவோ மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சியாளர்களுக்கு அறைகூவல் விடுத்தார். இந்த அளவு கூவலை உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொண்டு கம்யூனிசக் கட்சியிலுள்ள புரட்சியாளர்களும், மாணவர்கள் மற்றும் இராணுவத்திலிருந்த புரட்சிகர சக்திகளும் அணி திரண்டனர். அவர்களுக்கு நேரடியாகவே தலைமை தாங்கி கம்யூனிச கட்சியாயிருந்த முதலாளித்துவ பாதையாளர்களாக லியோசிசி இன்றைய டெங்கும்பல் ஆகியோரை கதிகலங்கச் செய்தார் சியாங் சிங்.

சியாங்சிங்கின் நேரடித் தலைமையில் நடந்த கலாச்சாரப் புரட்சியானது, உலக வரலாற்றில் இல்லாத அளவிற்கு சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. சீனமே தலைகீழாகப் புரட்டப்பட்டது. பெண்களின் நிலையில்கூட புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. பொதுவாக உலகமெங்கும் பெண்கள் அரசியலுக்கு வருவதை முதலாளித்துவ அரசியல்வாதிகள் கீழ்த்தரமாக நோக்கினர். ஆனால் முதலாளித்துவ சுரண்டல் சமூக அமைப்பை கட்டிக் காப்பதற்கு உணர்வு பூர்வமாக பணிபுரியும் எந்த பெண்மணியையும் அவர்கள் வரவேற்கத் தவறுவதில்லை. இந்நிலையை தலைகீழாக மாற்றியமைத்தார் சியாங் சிங். கலாச்சார புரட்சியின் போது சீன கம்யூனிசக் கட்சியின் பல்வேறு மட்டங்களுக்கு சமூகத்தின் பல்வேறு தரப்பிலிருந்தும் பெண்கள் முன் வந்து அவர்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்கும்படி ஊக்குவித்தார். அதே சமயத்தில் முதலாளித்துவ பாதையை அமல்படுத்த உறுதுணையாய் இருந்த, கம்யூனிச கட்சியில் தலைவர்களாய் இருந்த பெண்களை எதிர்க்கவும் அவர் தயங்கவில்லை.

இக்காலகட்டத்தில் நிலவுடைமை மற்றும் ஆணாதிக்கத்தின் சின்னங்களாக இருந்த திருமணம், சொத்துரிமை, போன்ற பெண்களுக்கெதிராய் இருந்த சட்டங்களில் பெரும் சீர்திருத்தங்களை கொண்ட வந்தார். கொடுமைப்படுத்தும் கணவனிடமிருந்து மணமுறிவு பெறுவதற்குரிய விவாகரத்து சட்டங்களையும் அமுல்படுத்தினார். பெண்ணடிமைத் தனத்தை ஒழித்த இருபாலினருக்கும் இடையே ஆன முழுமையான சமத்துவத்தை அமல்படுத்த வேண்டுமெனில், பழைய ஆணாதிக்கத்திலும் நில உடைமையிலும் ஊறிப் போயிருக்கும் மக்களுடைய கண்ணோட்டத்தை மாற்றாதவரை சாத்தியமில்லை. இதனைப் புரிந்து கொண்டு சியாங் சிங் முதன்முறையாக அனைத்து துறைகளிலும் பெண்கள் நுழைவதற்கும், தலைமைப் பொறுப்புகள் எடுத்துக் கொள்ளவும்


படிப்பகம்

www.padippakam.com

ஊக்குவித்தார். அவருடைய ஊக்குவிப்பினால் அவர்கள் உலக வரலாற்றில் முதன்முறையாக சோசலிச சமுதாயத்திலிருக்கின்ற ஆணாதிக்கத்தின் எச்ச சொச்சங்களை நூதனமான வடிவங்களில் கடுமையாக எதிர்த்துப் போரிட துவங்கினர்.

சியாங்சிங்கின் தலைமையில் பெண்கள் வானத்தை வசப்படுத்தவும் தயாராயினர். தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் நேரடியாக தொழிற்சாலைகளின் நிர்வாகத்திற்கு தலைமை ஏற்றனர். மாணவர்கள் ஏட்டுப்படிப்பை கற்பதோடு சீன மக்களின் உற்பத்தியில் நேரடியாகப் பங்கேற்றனர். கிராமங்களுக்கு மாணவர்களும், அறிவாளிகளும் சென்று மக்களிடமிருந்து கற்றனர். கற்றுக் கொடுத்தனர். கட்சியிலும் ஆட்சி நிர்வாகங்களிலும் இருந்த ஊழல் பெருச்சாளிகள் தீவிரமான முதலாளித்துவ சிந்தனையாளர்கள் மக்கள் மத்தியில் பிரமாண்டமான சுவரொட்டிகள் மூலமாக நேரடியாக, பகிரங்கமாக அம்பலப்படுத்தப்பட்டனர். மக்களின் நலனுக்கு எதிரான கருத்துக் கொண்ட அவர்கள் கட்சி தலைமையில் துவங்கி அடிமட்டம் வரை எந்த அமைப்பில் இருந்தாலும் நேரடியாகவே தயக்கமின்றி மக்களாலும் மாணவர்களாலும் விமர்சிக்கப்பட்டனர். பல இடங்களில் சியாங்சிங் இத்தகைய பேர்வழிகள் குறித்து பட்டிமன்றங்களே நடத்தினார்.

மக்களின் நலனை உயிராக கருதிய புரட்சியாளர்கள் அனைத்து துறையிலும் தலைமை ஏற்றதால் உற்பத்தி பல மடங்கு அதிகரித்தது. பல வியக்கத்தக்க அலகுமுனை சிகிச்சை உட்பட பல விஞ்ஞான சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன. இத்தகைய மாபெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்ட கலாச்சார புரட்சியின் தலைமையேற்ற சியாங்சிங் மீது உள்ளூர தீராத வஞ்சத்தை, அப்போது சீன கம்யூனிச கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட டெங்கும்பல், ஹியா போன்றோர் வளர்த்துக் கொண்டனர். இக்கும்பல் தக்க சமயம் பார்த்து காத்துக் கிடந்தனர்.

தோழர் மாவோவின் மறைவு இத்தகைய சந்தர்ப்பத்தை இக்கும்பலுக்கு வழங்கியது. மாவோவின் மறைவினால் அதிர்ச்சியிலும் தீராத துக்கத்திலும் ஆழ்ந்திருந்த சீன நாட்டின் நிலைமையை இக்கும்பல் பயன்படுத்திக் கொண்டு இழிவான முறையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். சீன கம்யூனிச கட்சிக்குள் மறைந்திருந்த இந்த முதலாளித்துவ பாதையாளர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினால் உண்மையான கம்யூனிச புரட்சியாளருக்கு என்ன நேருமோ அதுதான் சியாங்சிங்கிற்கு நேர்ந்தது. சியாங் சிங் மற்றும் அவரின் சகத் தோழர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு, மோசடியான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர். இரண்டு வருடங்கள் கழித்து நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தப்பட்டனர். 35 நீதிபதிகள் முன்னால் வேங்கையாக முழக்கமிட்ட சியாங்சிங் தனது வாதங்களின் மூலமாக டெங்கும்பலை கதிகலங்கச் செய்தார். புரட்சி செய்வது கம்யூனிசவாதிகளின் உரிமை! திருத்தல்வாத டெங் கும்பலே ஒழிக! நான் சாவிற்கு தயாராக இருக்கிறேன் என வீர முழக்கமிட்ட அவர் டெங் கும்பலின் அனைத்து வகை மோசடிக் குற்றச்



படிப்பகம்

www.padippakam.com

சாட்டுகளை தனது வாதங்கள் மற்றும் நையாண்டிகள் மூலமாக தூள் தூளாக்கினர்.

நீதிமன்றமே விசாரணையை தொடர்ந்து நடத்த முடியாமல் சியாங் சிங்கின் ஆவேசமான தாக்குதலில் தடுமாறியது. பின்னர் நீதிமன்ற விசாரணையை ஒத்திவைத்து சியாங் சிங்கிற்கு சதித்தனமான முறையில் மரண தண்டனை அளித்தது டெங் கும்பல். அப்போது சீனத்திலும் உலக நாடுகள் முழுவதும் உண்மையான கம்யூனிச புரட்சியாளர்கள் சியாங் சிங்கை விடுவிக்கக் கோரியும் டெங் கும்பலை எதிர்த்தும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், நூதனமான போராட்டங்களை நடத்தினர். அம்பலப்பட்டுப்போன டெங் கும்பல் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. 15 வருடங்கள் தனிமை சிறைத் தண்டனைக்குப் பின்பு கடந்த 1991-ஆம் ஆண்டு மே 14-ஆம் தேதி, டெங் கும்பல் சியாங் சிங்கை சிறையிலேயே கொடூரமான முறையில் கொலை செய்து விட்டனர். தனது வாழ்நாளின் இறுதி மூச்சு விடும் வரை மக்களின் எதிரிகளான திருத்தல்வாதிகளுக்கும் முதலாளித்துவ பாதையாளர்களுக்கும் எதிராக போராடிய சியாங்சிங்கின் வாழ்வை இப்படித்தான் சதித்தனமான முறையில் டெங்குபலால் பறிக்கப்பட முடிந்தது.

இதனால்தான் சியாங்சிங்கின் புரட்சிகர வாழ்க்கை உலக ஒடுக்கப்பட்ட மக்கள், முக்கியமாக பெண்கள் அனைவருக்குமே இன்றுவரை வழி காட்டும் ஒளிவிளக்காய் திகழ்ந்து வருகிறது. நாமும் அவருடைய பாதையை பின்பற்றி வழி நடப்போம்.

*நன்றி - ஏ வேர்ல் டு வின்*

## அனுமதி

''சார்! பெண்கள் கிளப் சமையல் போட்டி நடத்தி பரிசு தர்றதுக்காக பெரிய மீட்டிங் வெச்சுருக்கோம். அனுமதி....?

அப்படியா! கட்டாயமா தர்றோம். பொம்பளைங்களுக்காக போட்டி நடத்துறீங்கன்னா (சமையல் ரூமோடயே நிக்க வைச்சுக்கிறதுன்னா) மாட்டேன்னா சொல்லப் போறோம்''.

''சார்! எங்க பேட்டைல 30 அடி விநாயகர் செல வைக்கிறோம். நீங்க அத கண்டுங் காணாத விட்டுறன்னும் அனுமதி.....?''

''ஐயய்யோ! என்ன பேசுறீங்க நீங்க? இது தெய்வ காரியம் இல்லியா? (மக்களை மத போதையில் மூழ்கடிப்பது கடவுள் காரியமட்டுமல்ல, எங்க வேலையுந்தான்)...''.

''சார்! நம்ம ஊர்ல அழகிப் போட்டி நடத்தறோம். பரிசு தர்றதுக்கு மந்திரி அவர்களைக் கூப்பிட்டிருக்கிறோம். கூட்டம் நடத்த அனுமதி. ....''

நீங்க பெண்கள் முன்னேற்றப் பாதையில நடத்துவீங்கன்னா (அலங்காரம், கவர்ச்சியில் மூழ்கடித்து பிரச்சனைகளை மறக்கடிப்பீர்கள் என்றால்) தராம இருக்கறதுக்கு என்னம்மா இருக்கு? கட்டாயம் தாரோம்!''

''சில பெண்கள் அமைப்புகள் கூட்டம் வைச்சுருக்கோம், எங்க பிரச்சனைகளைப் பத்தியும், அதத் தீக்கற விதத்தப் பத்தியும் பேசப் போறோம். அதுக்கு அனுமதி....''.

''ஐயோ! பிரச்சனையா..... தீக்கறதா.... (எங்க அடித்தளம் ஆடிப் போயிடாதா?) செத்தாக் கூட தரமாட்டோம்''.

('மகிளா சக்தி' என்ற ஆந்திரப் பெண்கள் அமைப்பின் 'மகிளா மார்க்கம்' என்ற இதழிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது)


படிப்பகம்

www.padippakam.com

# நான்கு வயது சிறுமிக்கு நேர்ந்த கொடுமை

ஆகஸ்டு - 15 இந்திய நாட்டின் 'சுதந்திர நாள்! குழந்தைகளுக்கு பள்ளிகளில் போலி சுதந்திரத்தை கொண்டாட மிட்டாய்கள் கொடுக்கும் நாள்! நான்கு வயது சிறுமியின் முழுமையான சுதந்திரம் பறிபோய் பாலியல் வன்முறை (கற்பழிப்பு) கொடுமைகளுக்கு சின்னாபின்ன மாக்கப்பட்ட நாள்! இந்திய ஆளும் வர்க்கம் பீற்றி கொள்ளும் 'சுதந்திர திருநாளை' உண்மையான நிலையை மக்களுக்கு திரையிட்டு இராணி அண்ணா நகரில் காட்டிய நாள்!

சென்னை இராணி அண்ணா நகரிலே எப்பொழுதுமே பெண்களை பாலியல் ரீதியாக கேலி செய்வதையே பிழைப்பாகக் கொண்டிருந்தான் காமவெறியன் அலெக்ஸ்! அந்த பகுதியில் வாழும் பெண்கள் குறிப்பாக இளம் பெண்கள் இவனை பார்த்தவுடன் வீட்டிற்குள் பதுங்கிக் கொள்வர். அக்காமவெறி கொடூரன் பச்சிளம் குழந்தையையும் விட்டு வைக்கவில்லை.

ஆம்! 15.08.96 அன்று நான்கு வயது சிறுமியின் தாய் தண்ணீர் எடுக்க சென்றபோது, பக்கத்து வீட்டில் வசித்து வந்த அந்த கொடூரன் அலெக்ஸ் நான்கு வயது அந்த குழந்தைக்கு குளுகோஸ் கொடுப்ப தாகக் கூறி சமையல் அறைக்கு அழைத்துச் சென்றான். தனது நிலையை சற்றும் உணராத பச்சிளம் பிஞ்சு மனம் என்ன நடக்கும் என்பதை நினைத்துக் கூட பார்க்க வில்லை! அதற்கு மேல் நடந்த கொடுமைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கல்நெஞ்சமும் கரையும் சம்பவம் அது!

ஆம்! அக் குழந்தை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது.

தங்கையை காப்பாற்ற சென்ற போது குழந்தையின் ஒன்பது வயது உடைய அண்ணனையும் சமையல றைக்கு வர விடாமல் பயமுறுத்தி னான். முதலறையில் இருந்த கொடிய நெஞ்சமுடைய மயில்சாமிக்கு பச்சிளம் குழந்தை கொடுமைக்கு ஆளாக்கப்படுவது தெரிந்திருந்தும் தெரியாதது போல் தடுக்காமல் ஒதுங்கி விட்டான்.

**காமக் கொடூரனுக்கு துணை போகும் காவல்துறை:**

காலங் காலமாய் காவல் நிலையங் களில் நடக்கும் நிகழ்ச்சிதான் இக் குழந்தை சம்பவத்திலும் நடந்தது! மருத்துவர்கள் நிரூபித்த பாலியல் வன்முறையை குழந்தைகள் விளை யாடும்போது இச்சம்பவம் நடந் திருக்கும் என்றும் பல உண்மைக்கு புறம்பாக பொய் உதடுகளால் மொழிந்து வருகிறது 'மக்கள் காவலர்' களாக இருக்கும் காவல் துறை காமக் கொடூரர்கள்.

இராணி அண்ணா நகர் மக்களின் எழுச்சியாலும் பெண்ணுரிமை கழகத்தின் பிரச்சாரங்களாலும் காமக் கொடூரங்கள் மூலம் காட்டப்பட்டனர்.

நண்பர்களே! பொறுத்திருந்தது போதும்! பொங்கி எழுவோம்! பொறுக்கிகளின் அராஜகத்திற்கு எதிராக!

அரைமணி நேரத்திற்கு குழந் தையை கொடூரத்திற்கு உள்ளாக்கிய அலெக்ஸ் இக்கொடுமையை வெளி யில் சொன்னால் சூடு வைத்து விடுவேன் என்றும், குடும்பத்தை



படிப்பகம்

www.padippakam.com

நாசமாக்கிவிடுவேன் என்றும் பயமுறுத்தி அனுப்பினான் தண்ணீர் எடுக்க சென்ற தாய் தன் குழந்தையின் இந்நிலையை கனவில் கூட எதிர் பாத்திருக்க மாட்டாள்.

பயத்துடன் மூன்று நாள் சிறுநீர் கழிக்காமல் படுத்த படுக்கையாக அதிக ஜுரத்தில் இருந்த குழந்தையை பரிசோதித்த மருத்துவர் குழந்தைக்கு நேர்ந்த கொடுமைகளை ஆதாரத்து டன் விவரித்தார்.

நண்பர்களே! படிக்கும் ஒவ்வொரு வருக்குமே கண்ணீர் வருமென்றால் பிஞ்சு மனம் அந்த கொடுமையை எப்படி தாங்கும் சிந்தித்து பாருங்கள். தினம் தினம் உடல் வலியால் காய்ச்சலுடன் தன் மூச்சுக்காற்றை சுவாசித்து வருகின்றது அந்த பிஞ்சு மனம்!

# ரூப்கன்வார் வழக்கில் நீதிமன்றத்தின் ஆதிக்க வெறி அம்பலம்!

அன்பார்ந்த நண்பர்களே!

1987-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாளன்று டியோரலா கிராமத்தில் 18 வயதே உடைய ரூப்கன்வார் கணவன் இறந்த தீயிலேயே எரித்து கொல்லப் பட்டது நாமனைவரும் அறிந்ததே!

ஒன்பது ஆண்டுகளாக 'சிறப்பாக' வழக்கை விசாரித்த நீதிமன்றம் தீயில் கொலுத்தியதற்கான போதுமான சாட்சி யங்கள் இல்லை என்று கூறி ரூப்கன்வாரை கதர கதர தீயிலே கொன்ற கயவனை தண்டிக்க மறுத்துள்ளது! காகிதங்களிலே எழுதப்பட்டுள்ள சட்டங்களால் பெண் ணுக்கு நீதி வழங்க முடியாது என்பதை மக்களுக்கு வெளிச்சமிட்டு காட்டியுள்ளது! மேலும், கணவன் இறந்த உடன் மனைவி யும் இறக்க வேண்டும் என்ற பெண்ணிற்கு எதிரான 'உடன்கட்டை' வழக்கத்தை நிலை நிறுத்த நீதிமன்றங்கள் மிகுந்த வேகத்துடன் செயல்படுவது அம்பலப் பட்டுள்ளது!

இப்படி ஒரு தீர்ப்பைக் கூறியதன் மூலம் நீதிமன்றம் தன்னுடைய ஆணாதிக்க வெறியையும், நிலவுடமை வெறியையும் மக்களுக்கு திரையிட்டுக் காட்டியுள்ளது.

ஜனநாயக சக்திகளே!

சிந்தித்துப் பாருங்கள்! உயிரோடு ஒரு பெண்ணை தீயிட்டு கொலுத்தியதற்கே சாட்சிகள் இல்லை என்று இது போன்ற நீதிமன்றங்களாலும், சட்டங்காளாலும் பெண்களுக்கு நேர்ந்த கொடூரங்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கவில்லை.

ரூப்கன்வாரை போல பல்லாயிரக் கணக்கான பெண்கள் வஞ்சிக்கப்பட்டுள்ள னர்.

இது போதும் நமக்கு நீதிமன்றங்களும் சட்டங்களும் கற்பித்த பாடங்கள் போதும்! போதும்! இனி நாமே பெண்களுக்கு கொடுமை இழைக்கும் கொடூரர்களை தண்டிக்கப் போராடுவோம்!


படிப்பகம்

www.padippakam.com

# சட்டசபையில் போராட்டம் ஏன்?

இன்று நமது சமூகத்தில் பாலியல் ஒடுக்குமுறைகளும், வக்கிரங்களும், சீரழிவுகளும், பெருகியுள்ளன. மேலை நாட்டு பண்பாடு என்ற பெயரில் நச்சுப் பண்பாடான ஆபாசம் நமது சமூகத்தில் பரவிக் கொண்டிருக்கிறது. இந்த நச்சு பண்பாட்டை ஒழித்து ஆரோக்கியமான சமூகத்தை படைத்திடவே இரண்டரை ஆண்டுகளாக தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் ஆபாசஎதிர்ப்பு போர் முழக்கத்தை முழங்கி வருகிறது.

கடந்த இரண்டரை வருடங்களில் அரசுக்கு கோரிக்கைகள், மக்களிடையே பிரச்சாரம், மற்றும் சென்னையில் ஆபாச புத்தக எரிப்பு, மதுரையில் ஆபாச படச்சுருள் எரிப்பு, அழகிப் போட்டியை எதிர்த்து போராட்டம், ஆகஸ்ட்-5 தமிழகமெங்கும் அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் என்று பல போராட்டங்களை த.பெ.க செய்து வருகிறது. ஆனால், எங்களுடைய கோரிக்கைக்கும், அரசு தரப்பிலிருந்து எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. அதற்கு மாறாக போராட்டங்களுக்கு ஆதரவு தருபவர்களுக்கும் வேவு (கியு) போலீஸிடமிருந்து மிரட்டல்களும் பொய் வழக்குகளுமே தொடர்கின்றன.

இச்சூழ்நிலையில் நச்சு பண்பாட்டை ஒழிக்க வேண்டிய சட்டசபையோ சமூகத்தை சீரழிக்கும் ஆபாசத்தை வலுபடுத்துவதைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும், விவாதங்களிலும் இறங்கியது. அமைச்சர் ஞானசேகரன் ஈரோடு அரசு பேருந்துகளுக்கு ஸ்டெப்னி (டயர்) போட்டால் வேகமான பேருந்துகள் ஓடும் என்று கூறியதற்கு பதில் அளித்த போக்குவரத்து அமைச்சர் பொன்முடி நான் 'ஒருவனுக்கு ஒருத்தி' கலாச்சாரத்தில் வாழ்கின்றேன், உனக்கு இவ்வளவு சீக்கிரம் 'ஸ்டெப்னி' தேவையா என்று பெண்ணை கொச்சைப்படுத்தி கிண்டலடித்தான். உடனே இதைக் கேட்ட 'மக்களின் பிரதிநிதி'களான சட்டசபையோ எவ்வித வெட்கமுமின்றி சிரித்து மேலும் பெண்களை இழிவு படுத்தினர்.

மக்களிடம் ஓட்டுப் பிச்சை கேட்டு ஆட்சி பீடத்தில் உல்லாசமாக அமர்ந்து பெண்களை ஆபாசமாக விவாதித்த இந்த சட்டசபையில்தான் சமூகத்தை சீரழிக்கும் ஆபாசத்தை எதிர்த்து நோட்டீஸ் வீசு, ஆபாச எதிர்ப்பு முழக்கமிட்டது த.பெ.க!

26.08.96 அன்று காலை சரியாக 11.45 மணியளவில் சட்டசபைக்கு சாவு மணி அடிக்கப் பட்டது. ஆம்! பெண்களை இழிவாகப் பேசிக் கொண்டும், இரட்டை அர்த்த கிண்டல்கள் அடித்துக் கொண்டும் இருந்த சட்டசபையில் ஆபாச எதிர்ப்பு முழக்கங்கள் துண்டு பிரசுரம் என்னும் ஆயுதம் இறங்கியவுடன் 'மக்கள் பிரதிநிதிகளுக்கு' மண்டையே பிளந்தாற்போல் ஆயிற்று! ஆபாச எதிர்ப்பு சட்டசபையையே எதிரொலிக்க செய்தது. உடனே சட்டசபை



படிப்பகம்

www.padippakam.com

காவலர்கள் பலவந்தமாக சேலையை உருவியும், வாயை பொத்தியும், அடித்தும் எங்களை கைது செய்ய வந்தனர். ஆனால் அவர்களின் பலம் எங்களின் ஆபாச எதிர்ப்பு முழக்கங்களை நிறுத்த இயலவில்லை. காவல் மானியத்தை பற்றி விவாதித்த சட்டசபையே மூன்று நிமிடங்களுக்கு ஸ்தம்பித்தது. ஆபாசத்தை தடை செய்ய வக்கற்ற தமிழக அரசு ஆபாசத்தை எதிர்த்து போராடியவர்களுக்கு இரண்டு நாள் சிறை தண்டனை அளித்து சென்னை மத்திய சிறையில் அடைத்தது.

மறுநாள் அதாவது 27.08.96 அன்று சமூகத்தை சீரழிக்கும் ஆபாசத்தை தடை செய்ய எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல், மக்களிடமிருந்து நாம் எங்கே அம்பலப்பட்டு போய் விடுவோமோ என்று பயந்து நடுங்கிய கலைஞர் அரசு, ஆபாச எதிர்ப்பு முழக்கமிட்டவர்கள் 'தீவிரவாதிகள்' என்று திரித்து மக்களிடமிருந்து எங்களை தனிமைப்படுத்த முயன்றது. பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் த.பெ.க பெண்கள் 'தீவிரவாதிகள்' என்று கூறி முத்திரை இட்டது. இதுவரை த.பெ.க பெண்கள் செய்த போராட்டங்கள் அனைவரும் அறிந்ததே! பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு சீறியெழுந்து அதற்கு நியாயம் கேட்டு போராடியதையா 'தீவிரவாதம்' என்று கூறுகின்றனர்? கல்பனா சுமதி என்ற பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த போலீசாருக்கு தண்டனை வழங்க வேண்டும், சத்யா என்ற பெண் வரதட்சணை கொடுமையால் கொலை செய்யப்பட்டதை கண்டித்தும், காமவெறியன் பிரேமானந்தாவை தூக்கிலிட வேண்டும் என்றும் போராடியது த.பெ.க. ஆண் - பெண் உறவுகளை கொச்சைப்படுத்தும் மஞ்சள் பத்திரிக்கைள், நீலப்படங்களை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மஞ்சள் பத்திரிக்கைகளையும், ஆபாச படச்சுருளையும் தீயிட்டுக் கொளுத்தியது த.பெ.க.

இப்படிப்பட்ட பல போராட்டங்களை த.பெ.க தொடர்ச்சியாகவும், பகிரங்கமாகவும், மக்களைத் திரட்டியும் செய்துள்ளது. போராட்டங்களை மறைமுகமாக செய்துவிட்டு ஓடவில்லை! ஒவ்வொரு போராட்டமும் செய்து கொடுமைகளைக் கண்டு சிறைப் போராட்டமும் நடத்தியிருக்கிறது. இப்படிப் போராட்டமே வாழ்க்கையாக கொண்டுள்ள சமூகப் பிரச்சனைகளை தீர்க்கும் நோக்கத்தில் தனது வாழ்க்கையே அர்ப்பணித்துக் கொண்டுள்ள த.பெ.க பெண்கள் தீவிரவாதிகளா? ஓ கருணாநிதியின் அகராதியில் நியாயம் என்றால் 'தீவிரவாதம்' என்ற அர்த்தம் போலும்! அதனால்தான் நியாயவாதிகளை, 'தீவிரவாதிகள்' என்று சுட்டிக்காட்டுகிறார். இன்று கலைஞரே வெளியிடும் புத்தகங்களான குங்குமம், வண்ணத்திரை போன்ற புத்தகங்கள் பெண்களை மிக கேவலமாக சித்தரித்துக் கொண்டுள்ளது. அவரது சன் டி.வி.சேனலும் முழுக்க ஆபாசத்தை தூக்கிப் பிடிக்கின்றன. அதுமட்டுமல்லாமல் எம்.எல்.ஏ. முதல் எம்.பிக்கள் வரை திரையரங்குகள் வைத்து நீலப்படங்கள் வெளியிடுவதும்,



படிப்பகம்

www.padippakam.com

ஸ்டெப்னி என்று கிண்டல் செய்வதும், சத்துணவு ஆயாவின் அழகைப் பற்றி புகழ்வதும் பெண்களுக்கு சேலை அழகா? பேண்ட் சர்ட் அழகா? ரோஜா அழகா? மல்லிகை அழகா? என்று பெண்களின் அழகை ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருப்பதிலுமே இவர்கள் பொழுதை போக்கிக் கொண்டுள்ளனர். இவர்களா இன்று நமது பிரச்சனைகளைத் தீர்க்கப் போகிறார்கள் இல்லை! ஒரு புறம் கருணாநிதி, ஊழல் பேர்வழிகளை ஒழிப்பேன் என்று அதற்கான முழு முயற்சியில் இறங்குவதுபோல் போலி நாடகத்தை நடத்திக் கொண்டும் பெண்களுக்கு அதை செய்வேன், இதை செய்வேன் என்று பிதற்றுவதும், மறுபுறம் போராடும் பெண்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்பதும்தான் இவரின் தொடர்ச்சியான கபட நாடகமாக உள்ளது தலைவிரித்தாடும் தமிழக அரசின் அராஜகம்.

இக்கபட வேடதாரியின் ரௌடி கூலிப்படை ஆபாச எதிர்ப்பு முழக்கமிட்டு போராடிய எட்டு பெண்களையும் ஆபாசத்தைக் கட்டிக் காக்கும் நோக்கோடு 27.8.96 அன்று காலை 12.40 மணியளவில் சிறையிலிருந்து வெளிவந்ததுமே சுமார் 100 போலீசை வைத்து சுற்றி வளைத்தது. 'க்யூ' பிரிவு ஏ.சி. தாமஸ் எங்களை வேனில் ஏறும்படி கூறினான். நாங்கள் எதற்கு வேனில் ஏற வேண்டும் என்று கூறி ஏற மறுத்தோம். விசாரணைக்காக உங்களை அழைத்துச் சென்றாக வேண்டும் என்றான். உடனே நாங்கள் விசாரணையை பொது இடங்களில் நடத்தினால் மட்டுமே வருவோம் என்று கூறிய எங்களை பலவந்தமாக வேனில் ஏற்றியது மட்டுமல்லாமல் எங்களை பார்க்க சிறைக்கு வந்தவர்கள் மீது தடியடி பிரயோகம் செய்வேன் என்று மிரட்டினான். வலுக்கட்டாயமாக வேனில் ஏற்றப்பட்ட நாங்கள் 'ஆயிரம் விளக்கு பெண்கள் காவல் நிலையத்'திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அங்கே சி.ஐ.டி. பிரிவு டி.எஸ்.பி. ஜேம்ஸ் எங்களை கேள்விகளால் துளைத்து எடுத்தான். இதற்கிடையே போலீஸ் தலைமையகமான கமிஷனர் அலுவலகத்தில் இந்த அழுகிய சமூக அமைப்பை கட்டிக் காக்க, பெண்களை சீரழிக்கும் ஆபாசப் பண்பாட்டை தூக்கி பிடிக்க மிகுந்த ஆர்வத்துடன் வேகமாக செயல்படும் அனைத்து காவல் அதிகாரிகளும் ஆபாசத்தை எதிர்த்து போராடிய பெண்களின் மீது போடவுள்ள பொய் வழக்குகளையும் த.பெ.க.வின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினர்.

கடைசியாக 5.00 மணிக்கு ஒரு பொய் முதல் தகவல் அறிக்கையுடன் செயின்ட் ஜார்ஜ் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வந்தார். எந்த பிரிவின் கீழ் நாங்கள் கைது செய்யப்பட்டுள்ளோம் என்பதையும் அந்த காவல் நாய்கள் எங்களுக்கு கூற மறுத்துவிட்டனர்.

பின் 6.00 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் பெண்களை வைத்திருக்க கூடாது என்று பிரிவு 160 கி.பி.கோ. கூறினாலும் ஆறு மணிக்கு மேல் காவல் நிலையத்தில் வைத்து பல கொடுமைகளை


படிப்பகம்

www.padippakam.com

செய்தது, இந்த ஆளும் வர்க்க நலனை காக்கத் துடிக்கும் காவல் நாய்கள். எங்களிடம் போட்டோ வும், கைரேகையும் கேட்டதும் 'நாங்கள் மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுமதி வாங்கினால் மட்டுமே தருவோம்' என்று கூறியதும் எங்களை துன்புறுத்த ஆரம்பித்து விட்டனர்.

ஆளும் வர்க்க நலனில் சிறிதும் கூட பாதிப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ளும் காவல் கூலிப் படை யின் அங்கமான துணை ஆணை யாளர், (இன்டலிஜன்ஸ் பிரிவு) எங்களை அடிக்க ஆணையிட் டான்.

உடனே தனி அறையில் ஒவ்வொருவரையும் பிரித்து, 15-க்கு மேலான போலீஸ் சூழ்ந் தது. உடனே நாங்கள் கோஷம் போட்டோம். வக்கிரமான வார்த்தைகளால் திட்டி லத்தியால் அடித்து கைரேகை எடுக்க ஆரம் பித்தனர். கைரேகை தர மறுத்த தோழர் கலா, லத்தியால் முதுகு தண்டு வடத்தில் அடிக்கப்பட்டு மயக்கமுற்றார். தோழர் சந்திராவை லத்தியால் பலமாக கால்களில் கைகளில் அடித்து பலத்த காய மடைய செய்தனர். இவ்வளவு கொடுமைகளை செய்த பிறகும் வீரஞ்செறிந்த நம்பிக்கையைக் கொண்ட எங்களிடமிருந்து அவர்களால் போட்டோ எடுக்க முடியவில்லை.

ஒரு பக்கம் இந்த புதிய அரசு தான் பெண்களை 6 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது என்று வாய்கிழிய பத்திரிகையில் அறிக்கைகள் விட்டு, தான் மக்களுக்கான அரசு என்று காட்டிக் கொண்டு மறுபுறம் நியாயத்திற்காக போராடிய பெண் களை 6 மணியிலிருந்து 9.30 மணி வரை அடித்து துன்புறுத்தி பின் ஜி.டி. நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றனர். நீதிமன்றத்தில் எங் களை அடித்ததாக மாஜிஸ்தி ரேட்டிடம் கூறியதற்கு, அவர் "காந்தியடிகள் கஷ்டப்பட்டதால் தான் இன்று நமக்கு சுதந்திரம் கிடைத்தது. இன்று காந்தியைப் பற்றி பேசவில்லையா? அது போல் உங்களை நாளைய வரலாறு பேசும்! தியாகம் செய்ய வந்துவிட்டால் இதையெல்லாம் தாங்கிக் கொண்டுதானாக வேண் டும்' என்று கூறினார். இன்று ஆபாசத்தால் எவ்வளவுப் பெண் கள் பாலியல் பலாத்காரம் செய்யப் படுவதை இவர் அறியவில்லைப் போலும். ஏதோ நாங்கள் புகழுக் காக செய்கிறோம் என்று நினைத்து விட்டார் போலும். ஏனென்றால் இவரும் இந்த அரசின் ஒரு அங்கம்தானே! அடித்த விதத்தை கூறி காயங்களைக் காட்டினால் சட்டப்படி மாஜிஸ்திரேட் பதிவு செய்ய வேண்டும். ஆனால் நாங்கள் கூறியதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு கிட்டத்தட்ட 100 போலீஸ் சூழ்ந் திருந்த ஜி.டி. நீதிமன்ற வளாகத்தில் எங்களை ரிமாண்ட் செய்வதாக கூறினார். பிறகு எங்களை சென்ட் ரல் செயிலுக்கு 12 மணியளவில் கொண்டு சென்று விட்டனர்.

மறுநாள் காலையில் எங்களை வேலூருக்கு கொண்டு சென்றனர். வேலூர் சிறையில் அடைத்தபிறகு மனு பார்க்க அனுமதி மறுக்கப் பட்டுள்ளது. ஜாமீன் கிடைத்த வுடன் வேலூர் சிறைவாசலி லேயே மதுரை வழக்குக்காக மீண்டும் பொய் வழக்கு பதிவு


படிப்பகம்

www.padippakam.com

செய்து மதுரை சிறையில் 2 நாட்கள் அடைத்தனர்! வேலூரி லிருந்து த.பெ.க. பெண்களை மதுரை கொண்டு வருவதாக 10 ஆண் காவலர்களும் 6 பெண் காவலர்களும் பின்புறம் போலீஸ் வாகனம் உட்பட அணி வகுத்து ஏ.கே. 47 உடன் அழைத்துச் சென்றனர். மேலும் இரவில் மதுரைக்கு கொண்டு செல்லும் போது காவலர்களின் கொச்சை யான அரட்டைகளை காது கொடுத்தும் கேட்க முடிய வில்லை! இந்திய மண்ணையே கலங்கச் செய்த போராட்ட வீராங்கனைகளிடமே இந்த காவலர்கள் தங்கள் குறுக்கு புத்தியை காட்டும்போது, சாதா ரண பெண்களை இவர்கள் விட்டு வைப்பார்களா என்ன?

தமிழ்நாடு காவல்துறை எவ்வாறு கேவலமானதாகவும் கோழைத்தனமாகவும் உள்ளது என்பதை எளிதில் புரிந்து கொள்ள லாம்! மதுரை சிறையில் நடை பெறும் கொடுமைகளை வெளி யில் கூறமுடியாது! அவ்வளவு கொடுமை நிறைந்ததாகவும், கேவல நிலையிலும் உள்ளது. கைதிகளை மிக மோசமான முறையில் (ஆடை முழுவதையும் அவிழ்த்து) செக் பண்ணுவதும் கொலைக் கைதிகளை ரவுடி களைப் போல் மாற்றி மற்ற கைதிகளை அடக்கி ஆள்வதும், சாப்பாடு என்பது நாய்க்கு இடுவது போல் உள்ளது! இப்படி எங்கு சென்றாலும் நியாயம் கேட்டும்

ஆபாசத்தை ஒழிக்க வேண்டும் என்றும் போராடும் பெண்களின் வீடுகளுக்கு இரவு என்றும் பாராமல் ஒவ்வொரு வீடாகச் சென்று 'விசாரணை' என்ற பெய ரில் மிரட்டுவதும், மதுரையில் உள்ள ஒவ்வொருவர் வீட்டினை அளந்தும் சென்றுள்ளனர். சென்னையில் ஒவ்வொரு வீடாகச் சென்று த.பெ.க-வில் உறுப்பின ராக சேரக் கூடாது என்றும் த.பெ.க- பெண்களுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது என்றும் மிரட்டி வருகின்றனர்! சட்டம் என்பது அனைவருக்கும் சமம் என்று வாய்கிழிய பேசினாலும், மறு புறம் சட்டம் என்பது ஆளும் வர்க்கத்திற்கு சாதகமாகவே உள் ளது! மக்களுக்காக அல்ல! இதற்கு சட்டசபைப் போராட்டமே நல்ல எடுத்துக்காட்டு!

இப்படிப்பட்ட போராட்டங் களைக் கூட நாங்கள் ஏன் செய்கிறோமென்றால், மோசமான படங்களை ஓட்டும் தியேட்டர் களை அடித்து நொறுக்க மக்க ளாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்த்ததால் மட்டுமே இந்த ஆபாசம் என்ற நச்சுப் பண்பாட்டை ஒழிக்க முடியும். ஆபாசம் என்பதால் பெண்கள் மட்டும் பாதிக்கப்படுகிறவர்கள் என்பது தவறு. இதனால் இன்றைய இளைஞர்களும், மாணவர்களும், ஏன் குழந்தைகள் கூட மோசமான நிலைக்கு தள்ளப் படுகின்றனர். இதனை கண்டு நாம் அமைதியாக இருந்தோமானால் இந்த நச்சு, நம்மைக் கொன்று விடும். இதனை எதிர்த்துப் போராட வேண்டுமானால் ஆண்-பெண் இருபாலாரும் உணர்ந்து இந்த ஆபாச நச்சுப் பண்பாட்டை வேரோடு பிடுங்கி எறிய இணைந்துப் போராட வேண்டும்!

- மேரி



படிப்பகம்

www.padippakam.com

# தொடரட்டும் உங்கள் புரட்சி

*வேலூர் பூ.ஆ. கவின்மொழி*

பண்களே!
கண்ணே என்பான்,
கயல்விழியே என்பான்,
முத்தே என்பான்,
முழு மதியே என்பான்,
நீரோடை போன்ற கூந்தல் அழகியே
என்பான்,
நீயில்லை என்றால், நானில்லை
என்பான்,
உயிரே என்பான் - என்
நினைவே நீ என்பான்
'பூ' வே என்பான்
பூங்குயிலே என்பான்
மானே என்பான்
தேனே என்பான்
கிளியே என்பான்
அடுக்குத் தொடராய்
ஆசைவார்த்தைகளை
அள்ளி தெளிப்பான் வெளிப்புறத்தில்...
நீயும் அழகாக நம்பினாய்
அகப்பட்டுக் கொண்டாய்
அறியாமையினாலே
ஆனால் அவனோ - நீ
'அடிமை' என்பதனை மட்டும்
அகத்தில் கொண்டு
ஆனந்தப்பட்டான் - தினம்
அதிகார திமிரோடு - உம்மை
அசிங்கப் படுத்துவான்
அடிப்பான்
உதைப்பான் - 'உரிமை' என்று நீ
வாய்திறந்தாலே
'அடங்கா பிடாரி' என்பான்
ஆண்டாண்டு காலமாய் - நீங்கள்
அழுதது போதுமிங்கே
பெண்களே
நீங்கள்
எங்களை
கருவறையில் சுமந்ததே போதும்
இங்கே
இளமை பருவத்தில்
ஈன்றவர்களுக்கு அடிமையானாய்
அடுத்த பருவத்தில்
கணவனுக்கு அடிமையானாய்
முதுமை பருவத்தில்
பேரக்குழந்தைகளுக்கு அடிமையானாய்
காலகாலமாய்
கண்ணீரோடு வாழ்ந்தது போதும்
இனி
அடிமை என்ற நிலையினை
அடியோடு அகற்றிடுங்கள்
ஆறாவது அறிவை (பகுத்தறிவு)
அடையாளமிட்டு
ஆர்த்தெழுங்கள்
மென்மையான பூக்கள்போல்
இருந்ததுபோதும்
புரட்சிபூக்களாய் புறப்படுங்கள்
இங்கு "விடுதலை" வேண்டுமென்று
'வினா' வாக கேட்டால்
விசாரணை கமிஷன்போல்
வேதனைதான் மிஞ்சும்
துணிந்து நின்று போராடுங்கள்
ஒன்று சேர்ந்து போராடுங்கள்
அப்பொழுதுதான்
'ஆபாச படச்சுருள் எரிப்புப் போல்
அகிலமெல்லாம்
உங்களை அடையாளம் காட்டும்
பகுத்தறிவை பயன் படுத்தி
'பாவை' நாங்கள்
கோழைகள் அல்ல என்பதனை
மீண்டும், மீண்டும்
நிருபித்துக்காட்டுங்கள்
மாறுதல் என்பது மட்டும் மாறாதது
என்பதனை மனிதனுள் வைத்து
போராடுங்கள்
நிச்சயம்
மாற்றங்கள் நிகழும்!



படிப்பகம்

www.padippakam.com

# சங்கமாவோம்! சதியை வெல்வோம்!

மழையில்லாததால். வேலை கிடைக்காத முனியம்மா, காட்டுக்கு விறகு எடுக்க புறப்பட்டாள். அப்போது முனியம்மாள் மகள் சுமதி ஓடி வந்து, ஏம்மா, நாளைக்கு 9 - ம் வகுப்புக்கு புது பிள்ளைகளை சேர்க்கிறாங்க என்று கூறிய சுமதி என்னை சேர்த்து விடும்மா என்று அடம் பிடிக்க, அதற்கு முனியம்மா நான் என்னடி செய்ய, அண்ணன் காலேஜ் படிச்சுப்புட்டு தெண்டம்மா ஊரைச் சுத்தறான். உங்கப்பன் குடிச்சு, குடிச்சு உடம்பை கெடுத்துட்டு கிடக்கிறான் என்று கூறிவிட்டு காட்டுக்கு புறப்பட்டாள். ஏ முனியம்மா காட்டுக்கா போற நில்லு நானும் வாறேன் என பொன்னாம்மாளும் புறப்பட்டாள். இருவரும் பேசிக் கொண்டே காட்டை அடைந்தனர். விறகு வெட்டும்போதே "பொன்னம்மாக்கா, என் மவ படிக்கணும்னு அடம்பிடிக்கறா, கட்டட பீஸ் கட்டணுமாம் என்ன பண்ணுறதுன்னு தெரியல, நான் தான் படிக்காம இருந்துபுட்டேன் என் மவளாவது படிக்கட்டுமேன்னு நினைக்கிறேன்".

"ஏண்டி, பொட்ட புள்ள என்னத்த இருந்தாலும் அடுத்தவன் வீட்டுக்கு போகுறது தானே. உனக்காக சம்பாரிச்சு போட போகுது" என்று கேட்டாள் பொன்னம்மா.

"அட போக்கா நீ ஒண்ணு அவளை எப்படியாவது படிக்க வைக்கணும்னு எனக்கு கொள்ளை ஆசை தவளை ஒண்ணு இருக்கு அதை வைச்சுகிட்டு பணம் தர்றியா" என்று முனியம்மா கேட்டாள்.

"சரி, சரி வா முனியம்மா, நேரமாச்சு, இருட்டுது போகலாம்" என பொன்னம் மாள் சொல்ல முனியம்மாளும் புறப்பட் டாள்.

வீடு வந்தவுடன் விறகை போட்டு விட்டு, தவளையை அடகு வைக்க பொன்னம்மாளிடம் சென்றாள். "பொன்னம்மாக்கா இந்தா தவளையை வைச்சுகிட்டு பணம் தா" என்று முனியம்மா கேட்க, பொன்னம்மாளும் ரூ.200 கொடுத்தாள். சுமதி எதிர்பார்த்த நாளும் விடிந்தது. முனியம்மாளும், சுமதியும் பள்ளிக்கூடத்துக்கு புறப்பட் டார்கள். அப்ளிகேஷன் பாம் நிரப்பிய வுடன், கட்டாய நன்கொடை வசூல் பண்ணும் அறையை நோக்கி சென்றார்கள். தனது முறை வந்ததும் அப்ளிகேஷன் பாம் கொடுத்துவிட்டு நின்றாள்.

"என்னம்மா ஒவ்வொருத்தருக்கும் தனி தனியா சொல்லணுமா? 300 ரூபா கொடு" என்று கேட்டது ஒரு பெரிய உருவம்.

"200ரூபா தான் சாமி இருக்கு" என்று முனியம்மா சொல்ல, "ஏம்மா பணமில்லாட்டா ஆடு, மாடு மேய்க்க சொல்லு, ஏன் எங்க உசிரை வாங்குற" என்று அந்த பெரிய உருவம் அதட்ட, பயந்து கொண்டு வெளியே வந்தனர். சேர முடியாத சுமதிக்கு அவமானத்தால துக்கம் தொண்டையை அடைக்க வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

மாரியம்மன் கோவில் பக்கம் பெண்கள் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தனர் ஊரு வந்து சேர்ந்த முனியம்மா, "ஏண்டி என்ன ஒரே கூட்டம்?" என கேட்க "நம்மள இந்த மழை கூட ஏமாத்துதேன்னு பேசுறோம்" என்றாள் பார்வதி.

உடனே லட்சுமி "இந்த கருணாநிதி வந்தாலே இப்படி தான் மழை பெய்யுறதே இல்ல" என்றாள். அதற்கு முனியம்மா, "ஆமா, ஆமா, அம்மா காலத்துல நம்ம வீட்டுல மூட்டை மூட்டையா குவிஞ்சு கிடந்துச்சல" என்றாள். இவர்களிருவரை யும் மடக்கி, "அடி சும்மா இருங்கடி, மகமாயி கண்ணைத்திறந்தாதான் மழை



படிப்பகம்

www.padippakam.com

வரும் நம்ம ஊர்ல நோன்பு இருந்து ஊர் திருவிழா எடுத்து எத்தனை வருஷமாச்சு'' என்று பொரிந்தாள் மங்கம்மாள். இடையில் சுமதி வந்து ''மழை வருறது கலைஞராலோ, சாமியாலோ இல்ல பெரிய, பெரிய காண்ட்ராக்ட்காரவங்க காடுகளை அழக்கிறதுனாலேதான் மழை வரல'' என்று கூறினாள்.

பொழுது சாயவே பெண்கள் கலையத் தொடங்கினர். முனியம்மா வீட்டுக்கு வந்தவுடன் அடுப்ப பற்ற வைத்தாள். சுமதியின் அப்பா நல்லா குடித்துவிட்டு போதையில் தள்ளாடிவந்தார். ''சுமதி சுமதி பள்ளி கூடம் சேர்ந்தாச்சா?'' என்று கேட்க, ''இல்லப்பா பணம் பத்தலன்னு துரத்தி விட்டுட்டாங்க'' என்று சொன்னாள். எவன் அவ பணம் கேட்டான் என்று திட்ட, ''யோவ் குடிச்சுட்டு வீராப்பா பேசுறதுல ஒண்ணும் குறைச்சலே இல்ல'' என்று அலுத்துக் கொண்டாள் முனியம்மா. மணி பத்து ஆகி விட்டதால் படுத்துவிட்டனர். சுமதிக்கு தூக்கம் வராமல் பேச தொடங்கினாள் ''ஏம்மா, நம்ம நாட்டுல விவசாயிகள்தான் நிறைய இருக்கிறோம் நாம்ம விவசாயம் பண்ணாட்ட யாராவது நெல்லை பார்க்க முடியுமா, சாப்பிட முடியுமா? ஆனா நம்ம ஸ்கூல்ல சேருவதே கஷ்டமா இருக்கே'' என்று சொன்னாள் சுமதி. அண்ணன் கோவிந்தன் அப்போதுதான் வீடு வந்து சேர்ந்தான். ஏம்மா, சாப்பாடு கொடு என்று சொல்லிவிட்டு, சுமதி பள்ளிக்கூடம் போனது என்னாச்சு என்று கேட்க ''ரூ.300 கேட்டாங்க, பணம் குறைவாக இருந்ததால துரத்திவிட்டுட்டாங்க'' என்றாள். ''ஏண்ணே! நாமெல்லாம் படிப்பதே குதிரை கொம்பா இருக்கே. 'கிராமமே' இந்தியாவின் இதயம் 'விவசாயிகள்' நாட்டின் முதுகெலும்பு என்றெல்லாம் அரசியல்வாதிகள் சொல்வதும், புத்தகத்தில் படிப்பதும் எவ்வளவு பொய்'' என்று கோபமாக கூறிவிட்டு படுத்துவிட்டாள் சுமதி. ஏம்மா ஒண்ணு செய்யலாம், ஆட்டைவித்துபுட்டு ஸ்கூல்ல சேர்க்கலாம். காலையிலே சந்தையிலே போய் வித்துட்டு வாறேன், என்று படுக்க சென்றுவிட்டான்.,

காலை விடிந்ததும், முனியம்மாள் கூலி வேலைக்கு தயாரானாள். நாத்து நடும் வேலை காலை 6 மணிக்கு போய் மாலை 6 மணி வரை செய்தால் ரூ. 20, 15 பேர் கூட்டமாக பேசிக் கொண்டே வேலைக்கு சென்றனர். கொல்லை போய் சேர தாமதமானதால் கொல்லைக்காரர் சத்தம் போட்டார். கூலிக்கு வந்தவர்கள் நாத்து பறித்து வைக்க மதியமாயிற்று ஒரு மணிக்கு மேல் சாப்பிட விட்டார்கள். கொல்லைக்காரர் சாப்பாடு கொடுக்க அனைவரும் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். 2 மணிக்கு வேலை செய்ய ஆரம்பித்தனர். இடையில் கொல்லைக்காரர், ''என்ன ரொம்ப இடைவெளி விட்டு நாத்து நடுறீங்க'' என்று கோபப்பட, கூலிக்கு வந்தவர்கள் சண்டைக்கு பிடித்து கொண்டார்கள் 5½ மணி ஆனதும் வேலையை நிறுத்திப்புட்டு, கூலி பெற்றுக் கொண்டு வீட்டுக்கு புறப்பட்டார்கள். தண்ணிலே நாள் பூரா நின்னு நாத்து நட்டது முனியம்மாவுக்கு கஷ்டமாக இருந்தது. அதோடு நாலு விறகை எடுத்து கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

அம்மாவை எதிர்பார்த்த சுமதி, அம்மா வந்ததும், கையைப் பிடித்துக் கொண்டாள். களைப்போடு வந்த முனியம்மா, சுமதி போய் 100 கடலை எண்ணெய், துவைக் குற சோப்- 1, வாங்கிட்டு 50 பைசா எடுத்துக்கோ என்றாள் சுமதி காசு வாங்கியதும் கடைக்கு ஓட்டம் பிடித்தாள். முனியம்மாள் சுமதி பாவாடை, சட்டையுடன் தன்னுடைய சேலையையும் துவைக்க எடுத்தாள். கடைக்கு சென்ற சுமதியும் வந்து சேர, முனியம்மாள் ''சுமதி சாப்பாடுசெய், நான் துணி துவைச்சுட்டு குளிச்சுட்டு வந்துறேன்'' என்று நகர்ந்தாள். சுமதியும் அடுப்பு பற்ற வைத்துவிட்டு, ரேசன் அரிசியை ஊறவைத்தாள். சோறு செய்ததும் ரசம் செய்து விட்டு வாசலில் பிள்ளைகளுடன் விளையாடினாள். அம்மாவும் குளித்துவிட்டு, துணிகளை காய வைத்துவிட்டு வீடு வந்தாள். கொஞ்ச நேரத்திலே சுமதி அண்ணன் கோவிந்து ஆடு விற்ற பணத்தை கொண்டு வந்து முனியம்மாவிடம் கொடுத்துவிட்டு, கொஞ்சம் வேலை இருக்கு, லேட்டா



படிப்பகம்

www.padippakam.com

வரேன் என்று சென்று விட்டான். முனியம்மாள் - அண்ணன் லட்சுமணன் ஏம்மா, கோவிந்த் இல்லையா என்று கேட்க, ''ணஅண்ணே பசங்களெல்லாம் பக்கத்து வூட்ல பேசிக்கிட்டு இருப்பாங்க, அங்க தான் கோவிந்த் இருப்பான் என்று கூறிவிட்டு சாப்பிடுங்கண்ணா'' என்றாள், ''இப்பதாம்மா சாப்பிட்டு வரறேன்'', என்று சொல்லிவிட்டு சென்றார்.

வயசு பசங்களெல்லாம் கூட்டமாக உட்கார்ந்து பேசி கொண்டிருந்தனர் மாமா வருவதை கண்டதும் ''வாங்க மாமா, என்ன இந்த நேரம் வந்திருக்கீங்க?'' என்றான் கோவிந்த்.

''ஒண்ணுமில்ல. கரெண்ட் சர்வீசுக்கு எழுதிபோட்டு 5, 6 வருஷமாச்சு இன்னும் கிடைக்கல. பத்தாதற்கு பெட்ரோல், டீசல் விலையெல்லாம் ஏறிப்போச்சு, உரம், பூச்சிமருந்து விலை ஏறிப்போச்சு நம்ம உழைப்பும் போட்டு, கூலி கொடுத்து கடைசியா விவசாயிக்கு மிஞ்சுறது எதுவுமில்ல. புதுசா வந்தவங்களாவது விலையை குறைப்பாங்கன்னு பார்த்தா இப்படி இருக்கே'' என்று புலம்பினார். ''மாமா, நம்ம நாடு ஐ.எம்.எப்., உலக வங்கியிடம் கடன் வாங்கியருப்பதால், காட் ஒப்பந்தத்தில நம்ம நாட்டை கையெ ழுத்து போடச் சொல்லி நிர்ப்பந்திக்கிறது பணக்கார நாடுகள், டங்கல் ஒன்று சொல்லி பேச்சு அடிப்பட்டதே, அதில் கையெ ழுத்து போட்டது நம்ம நாட்டை அடகு வைத்தது மாதிரி. அவர்கள் சொல்றதுக் கெல்லாம் பூம்பூம் மாடு போல் தலை யாட்டவேண்டியதுதான். அரசு சலுகை களெல்லாம் குறைக்கப்படுகின்றன மான்ய வெட்டு, உரம், பூச்சி மருந்து, லோன் கிடைப்பதில்லை. விவசாயக்கடன்கள் ரத்து செய்யப்படுவதில்லை. நாம் விதை சேமிக்க முடியாது. இப்போதே விதை பண்ணைகள் தொடங்கிவிட்டன. போக போக ரேசன் கடைகள் கூட இழுத்து மூடப்படும்''.

''அப்ப நம்ம நாடு வெளி நாட்டாரிடம் சிக்கி தவிக்குதுன்னு சொல்லு'' என்றார் லட்சுமணன். ஆமா, மாமா சுதந்திரத்திற்கு முன்னால் நேரடியாக அதிகாரம் பண்ணி னான். இப்ப, நம்ம நாட்டுல உள்ள பணக் காரர்கள் வழியாக அதிகாரம் பண்ணுரான் என்றான் கோவிந்த்.

இவர்கள் பேசும்போது பெரிய கூட்டமே கூடியது. சுமதியும் முனியம் மாளும் வந்து சேர்ந்தார்கள். சுமதி, பெருமுச்சு விட்டு, ''அண்ணே, நீ இவ் வளவு நேரம் பேசுனதை கேட்டுகிட்டே இருந்தேன் பயமா இருக்கு, 2000-இல் அதை செய்வோம் என சொல்வதெல்லாம் ஏமாத்துறது தானா எதுல முன்னேற்ற முன்னு பார்த்தா (ஆபாசத்திலேதான்) நாகரிகம் என்ற பெயரிலே ஆபாச பட மெல்லாம் ஓடுதே, ஆபாச பத்திரிகைகள் விக்குதே, ஏன்?'' என்று கேட்டாள் சுமதி ''இதுவும் மேலை நாட்டாரின் சீரழிவு கலாச்சாரத்தை நம்ம மண்ணில புகுத்தி, நம்மை சிந்திக்க விடாமல் தடுக்கவே திட்டமிட்டே ஆபாசம் புகுத்துறாங்க.

கட்டாய இலவசக் கல்விதான்னு மாணவர்களும், வேலை தான்னு இளைஞர்களும், தங்கள் உரிமைக்காக விவசாயிகளும், தொழிலாளிகளும், தங்கள் விடுதலைக்காக பெண்களும் ஒண்ணு சேரக் கூடாதுன்னுதான் நாகரீகமென்ற போர்வையிலே நம்மை எங்கேயோ இழுத்துட்டு போறாங்க''. ''ஆமா, இந்த ஆபாசம் எவ்வளவு பெரிய அபாயம்னு யாருமே எதிர்த்து கேட்கலையா'' என்றாள் சுமதி. ''ஏன் கேட்கல தமிழ்நாடு பெண்ணுரிமை கழகம் என்ற பெண்கள் அமைப்பு ஆபாசப் புத்தகங்களை சென்னை மவுண்ட் ரோட்டில எரிச்சாங்க, ஆபாசப்படச் சுருள்களை மதுரையில சிம்மக்கல் ரவுண்டானாவுல எரிச்சு, கைதானாங்க 15 நாள் ரிமாண்ட் ஆனவங்களை 11 வக்கீல்கள் ஆஜராகி சொந்த ஜாமினில் எடுத்தாங்க'' என்றான் கோவிந்த்.

எல்லோரும் வாய்மேல கைவைத்து கேட்டு கொண்டிருந்தார்கள். ''அப் படின்னா நானும் அந்த பெண்கள் சங்கத்தில் சேர்ந்து. ஆபாசத்தை எதிர்க்கப் போறேன்'' என்றாள் சுமதி. ''ஏப்பா, விவசாயிகளை மடையன்னு நினைச்சு



படிப்பகம்

www.padippakam.com

கிட்டுதான் இப்படி செய்யுறாங்க. நாமும் ஆபாசத்தை எதிர்த்தால் என்ன?'' என்று கேட்டார் லட்சுமணன். இளைஞர் சமூகத்தை நாசப்படுத்துற இந்த ஆபாசத்தை எதிர்த்தே ஆகனும் என்றான் இளைஞன் ஒருவன்.

''சங்கமாவோம். சங்கடங்கள் தீர்ப்போம். சங்கமாவோம் சதியை வெல்வோம்''

என கோவிந்த் சொல்ல, ''ஆமா என்று அனைவரும் சொல்லிவிட்டு, தங்கள் கஷ்டத்துக்கான காரணத்தை அறிந்தவர்களாய், அதை எதிர்க்க துணிந்தவர்களாய் புது தெம்புடன் புறப்பட்டார்கள் புதிய பாதையை நோக்கி....

கலா

# த.பெ.க.வின் அமைப்புச் செய்திகள்

ஜுன் 22 அன்று சென்னையில் ஆபாச எதிர்ப்பு கூட்ட அமைப்பு சார்பாக போடப்பட்ட துண்டு பிரசாரங்கள் சென்னை அண்ணா சாலையில் வினியோகிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 5, ஆபாச எதிர்ப்பு தினமாக அறிவிக்கப்பட்டு குறளகம் முன்பு தோழர் லட்சுமி தலைமையில் ஆபாசத் திரைப்படம், பத்திரிகைகளை தடை செய்யக் கோரியும் ஆபாச வீடியோ கேசட்டுககளை பறிமுதல் செய்யக் கோரியும் ஆபாச எதிர்ப்பு இயக்க கூட்டமைப்பு சார்பாக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.

ஆகஸ்ட் 12 அன்று ஆபாச வெளியீடுகளை தடை செய்யக் கோரி சென்னை கலெக்டரிடமும் காவல்துறை ஆணையரிடமும் மனுக்கொடுக்கப்பட்டது. மேலும் முதல் அமைச்சருக்கும் தமிழக செய்தி துறைக்கும் மனு அனுப்பப் பட்டது.

ஆகஸ்ட் 5, ஆபாச எதிர்ப்பு தினமாக அறிவித்து கையெழுத்துப் போஸ்டர் போடப்பட்டது. பெண்களை கிண்டல் செய்தல், தகாத முறையில் பெண்களிடம் நடந்து கொள்ளுதல் போன்றவற்றை கண்டித்து சமூக விரோதிகள் எதிர்ப்பு கூட்டமைப்பு சார்பாக தெருமுனைப் பிரச்சாரம் நடத்தப்பட்டது.

தருமபுரி : ஆபாசத்தை எதிர்த்து பிரச்சாரக்குழு ஒன்று ஒரு வாரம் கிராமங்கள், நகரங்களில் பிரசாரம் செய்தது. ஆபாச படங்கள், ஆபாச பத்திரிகைக்களை தடை செய்தது. ஆபாச படங்கள், ஆபாச பத்திரிகைகளை தடை செய்ய கோரி மனுவுடன் மக்களிடம் பெற்ற கையெழுத்துக்களை இணைந்து மாவட்ட ஆட்சியாளர், காவல்துறை கண்காணிப்பாளர், அமைச்சர் முல்லை வேந்தன் (விளம்பரம் மற்றும் செய்தி தொடர்புதுறை) இவர்களுக்கு மனு அனுப்பப்பட்டது.

ஆகஸ்ட் 5-ஐ ஆபாச எதிர்ப்பு நாளாக அறிவித்து மதுரையில் துண்டு பிரசுரம் வினியோகிக்கப்பட்டது. கையெழுத்து போஸ்டர் ஒட்டப்பட்டது. ஆகஸ்ட் 5 அன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலக முன் தோழர் குப்பம்மா தலைமையில் ஆபாசத்தைக் கண்டித்து ஆபாச திரைப்படம், பத்திரிகைகள், ரிக்கார்ட டான்ஸ், புளூ பிலிம் ஆகியவற்றை தடை செய்யக் கோரியும், ஆபாச வீடியோ கேசட் கடைகளை பறிமுதல் செய்யக் கோரியும் ஆர்ப்பாட்டம் செய்து மாவட்ட ஆட்சியாளரிடம் மனுக் கொடுக்கப்பட்டது.

சேலம் : ஆகஸ்ட் 5-ஐ ஆபாச எதிர்ப்பு நாளாக அறிவித்து துண்டு பிரசுரம் வினியோகிக்கப்பட்டது. கையொழுத்து போஸ்டர் ஒட்டப்பட்டது. ஆகஸ்ட் 5 அன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன் தோழர் காசாம்பாள் தலைமையில் ஆபாசத்தைக் கண்டித்து ஆபாச திரைப்படம் பத்திரிகைகள், ரிக்கார்டு டான்ஸ், புளூ பிலிம் ஆகியவற்றை தடை செய்யக் கோரியும், ஆபாச வீடியோ கேசட் கடைகளை பறிமுதல் செய்யுமாறும் ஆர்ப்பாட்டம் செய்து மாவட்ட ஆட்சியாளரிடம் மனுக் கொடுக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# சீரழிக்கும் 'உலக அழகிப் போட்டி'

*''அரைகுறை ஆடையிலே*
*ஆடம்பர மேடையிலே*
*அழகிப் போட்டி நடக்குதடா*
*காமக் கண்கள் ரசிக்குதடா*
*பெப்சி கோலா, கொக்கோ கோலா*
*காசை அள்ளிக் கொடுக்குதடா*
*மேலை நாட்டு பண்பாடு*
*பெண்களை இழிவு படுத்துதடா''*

ஆம்! இன்று மேலை நாட்டுப் பண்பாடு நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு முனையிலும் ஊடுருவி நம்மை சின்னாபின்னமாக்கி வருகிறது. செயற்கைகோள் சேனல்கள் மூலமாக பல்வேறு ஆபாச நிகழச்சிகளை தினமும் 'சன்' 'ராஜ்' போன்ற தனியார் மற்றும் அரசு நிறுவனங்களும் ஒளிபரப்பு கின்றன. இது மட்டுமல்லாமல் இளைய சந்ததியினரை உருவாக்கும் கல்வி நிறுவனங்கள் முதல் ஒவ்வொரு தெரு முனைகள் வரை பெண்களை 'அலங்கார பொம்மைகளாக' 'நகைகளை மாட்டும் ஸ்டாண்டுகளாக' 'கவர்ச்சி காட்டும் பொருளாக' சித்தரித்து 'அழகி'களாக அணிவகுக்கும் 'அழகிப் போட்டி' களை நடத்துவது அன்றாட நிகழச்சியாக உள்ளது. இன்றைய கல்லூரிகளில் 'அழகிப் போட்டி' இல்லாத ஒரு கலை நிகழ்ச்சியே இல்லை என்றே கூறும் அளவிற்கு உள்ளது. மேலும் டெலி விஷன் திரையிலும், தினசரி பத்திரிக்கை களிலும் 'மிஸ் யுனிவர்ஸும்', 'மிஸ் வோல்டும்' போட்டி போட்டுக் கொண்டு பெப்சி கோலா, கொகோ கோலாவை, விளம்பரம் செய்த வண்ணமாக உள்ள னர்.

இச்சூழலில் தற்போது மிகுந்த ஆரவாரத்துடன் வெளிநாட்டு முதலாளி களுக்கு வால் பிடித்து சீரழிவான சினிமாக்களில் நடித்து வந்த அமிதா பச்சன் தன்னைப் போன்ற இந்தய தரகு முதலாளிகளை (மக்களின் உழைப்பை சுரண்டியே பிழைப்பு நடத்தி வரும்) கொண்ட அமிதாபச்சன் கார்ப்பரேசன் லிமிடெட் 'உலக ஆழகிப் போட்டி' யை நவம்பர் மாதம் நடத்தி உள்ளது.

இந்த 'உலக அழகிப் போட்டியை' பற்றி பல்வேறு விவாதங்கள் நம்மி டையே பரவலாக உள்ளது. விவாதங் களுக்கிடையே எழுந்த பெரும்பான்மை யான கேள்விகளுக்கு பதிலளிக்கும் வண்ணமாக இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

**கே: 'அழகிப் போட்டி' பெண்களை இழிவுபடுத்துவது எப்படி?**

ப: பெண்ணின் உடலளவை, உயரம் போன்றவற்றையே கணக்கில் கொண்டு அரைகுறை ஆடையிலே நடத்தப்படும் அழகிப் போட்டி முழுமையான மனித ஆளுமையற்றவர் களே என்று பெண்களை இழிவு படுத்துகிறது. பெண்ணடிமைத் தனம் அடிகோல வழிவகுக்கிறது. நுகர்வு பொருட்களை விற்க பயன்படும் ஒரு சாதாரண பாலியல் பொருளாக இழிவுபடுத்துவதுதான் 'ஆழகிப் போட்டி'!

**கே: 'அழகிப் போட்டி'யால் உண்டாகும் பாதிப்புகள் என்ன?**

ப: பல்வேறு பாலியல் ஒடுக்கு முறைகளுக்கும், வக்கிரங்களுக்கும், சீரழிவுகளுக்கும் பெண்களை, மக்களை ஆளாக்குவதுதான் 'அழகிபோட்டி'.

ரோட்டில், பஸ்ஸில் செல்லும்போது கூட பெண்ணை கவர்ச்சி பொம்மை யாகவே பார்ப்பதால் உரசல்கள், இடிகள் இன்னும் வார்த்தைகளால் கூட இயலாத அளவுக்கு கொடுமைகள்!

இராணி அண்ணா நகரில் நான்கு வயதுக் குழந்தையும், வியாசர்பாடியில்


படிப்பகம்

www.padippakam.com

ஒரு வயதுக் குழந்தையும் பாலியல் வன்முறைக்கு ஆளாகிய கொடூரம்! இன்னும் பல்வேறு சீரழிவுகளுக்கு பெண்களை ஆளாக்குவதுதான் அழகி போட்டி!

மேலும் இந்த அழகிப் போட்டி பல்வேறு வகைகளில் சுரண்டப்படும் பெண்கள் மற்றும் மக்களின் ஒட்டு மொத்த போராட்ட உணர்வை அடியோடு கொல்கின்றது.

**கே: போட்டியில் அறிவுத் திறனை பரிசோதிக்கும் கேள்விகள் தானே கேட்கிறார்கள்?**

ப: போட்டியில் கலந்துக் கொள்ளும் பெண்ணிடம் உன் கணவன் எப்படிப் பட்டவனாக இருக்க வேண்டும், நீ ஒரு கம்பெனியில் மேனேஜர் வேலையில் இருப்பாயானால், கம்பெனியில் ஒரு முக்கிய வேலை இருக்கும் சமயத்தில் கணவன் வெளியில் போக அழைத்தால் என்ன செய்வாய்?

இது போன்ற கேள்விகள் தான் அறிவுத் திறனை பரிசோதிக்கும் கேள்விகளா என்ன? இதற்கு பதில் கூறுவதாலா தன்னம்பிக்கை வளரும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

இல்லவே, இல்லை! நண்பர்களே! மேலை நாடுகளுக்கு சிறந்த கைகூலியாக சிறந்த தரகு முதலாளியாக இருப்பதை யும், மேலை நாட்டு பண்டங்களை சந்தைக்ளில் விற்கும் திறன் உடைய வளா என்பதை பரிசோதிக்கும் பல அறிவை மழுங்கடிக்கும் கேள்விகளே கேட்கப்படுகின்றன.

**கே: அழகிப் போட்டியில் வரும் இலாபத்தை அனாதை இல்லங்களுக்கு தானே கொடுக்கிறார்கள்? இந்த 'உலக அழகிப் போட்டியில் வரும் இலாபமும் ஊனமுற்றவர்களுக்கு தானே தரப் போகிறார்கள்?**

ப: இது பொய்யான பிரச்சாரம்! இந்திய நாட்டினுடைய பொருளா தாரத்தை முழுமையாக கொள்ளை யடித்து பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளை இலாபம் அடையவே நடத்தப்பெறும் இந்த உலக அழகிப் போட்டியில் வரும் இலாபத்தை எப்படி அனாதை இல்லங்களுக்கும் ஊன முற்றவர்களுக்கும் தர இயலும்! அப்படியே தந்தாலும் கிடைக்கும் பல கோடி இலாபத்தில் தாங்கள் செய்யும் கொடுமைகளை மூடி மறைக்க ஒரே ஒரு எலும்பு துண்டை போட்டுவிட்டு அனைத்தையும் கொடுத்துவிட்டோம் என்று கும்மாளம் அடிப்பவர்கள்தான் இந்த கூட்டம்.

**கே: கற்பழிப்பு, வரதட்சணை, கொடுமை போன்ற பெண்களுக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்து போராடுவதை தவிர்த்து அழகிப் போட்டியை, எதிர்த்து ஏன் பெண்கள் அமைப்புகள் போராடுகின்றன?**

ப: இந்தக் கேள்வியை கேட்ப வர்கள் ஒன்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த பாலியல் வன்முறை களுக்கும் மூல காரணமாக இருப்பது இந்த அழகிப் போட்டிதான் 'அழகு ஒன்றே பெண்ணின் இலக்கணம்' என்ற அடிமைத்தனத்தை போதித்து மறுபுறம் திருமணம் என்ற வியாபார சந்தையில் உழைக்காமலே பணத்தை கொள்ளை யடித்து பல வரதட்சணை கொலை களுக்கு பெண்களை உள்ளாக்குவது இந்த அழகிப் போட்டி, இப்படி பல பெண்களுக்கு எதிரான கொடுமை களுக்கு மூல காரணங்களாக உள்ள இந்த அழகிப் போட்டியை எதிர்த்து போராடுவது ஒவ்வொரு பெண்கள் அமைப்பின் கடமை!

**கே: இத்தனை ஆண்டு காலமாக இலண்டன், அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலே நடந்து வந்த அழகி போட்டி, சமீப காலங்களாக பிலிப்பன்ஸ், தாய்லாந்து, இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் நடத்தக்**



படிப்பகம்

www.padippakam.com

காரணம் என்ன? அழகிப் போட்டிக்கும் பின் தங்கிய நாடுகளுக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டா?

ப: ஆம்! நண்பர்களே! மேலை நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார இக்கட்டை சரிசெய்ய இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளில் பல கோடிகள் இலாபத்தை கொள்ளையடிக்க அமெரிக்கா போன்ற மேலைநாடுகள் திட்டமிட்டு நடத்துவதுதான் இந்த உலக அழகிப் போட்டிகள்.

கே: தற்போது பின்தங்கிய நாடுகளை சேர்ந்த பெண்களே அழகிகளாக தேந்தெடுக்கப்படுகிறார்களே? ஏன்?

ப: வேறொன்றும் இல்லை. சுஸ்மிதா சென்னையும், ஐஸ்வர்யா ராயையும் வைத்து பெப்சி கோலாவும், கொக்கோக் கோலாவும் போட்டியிட்டு இந்திய சந்தையில் நிலையான இடத்தைப் பிடித்தது போல இன்னும் பல்வேறு மேலை நாட்டு பொருட்கள் இந்த 'அழகிகள்' மூலம் விற்க திட்டமிட்டு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்தான் இந்த 'உலக அழகிகள்'.

கே: 'உலக அழகிப் போட்டிக்கு' இந்திய ஆளும் கூட்டம் துணை போகிறதாமே? எப்படி?

ப: மேலை நாடுகள் இந்தியாவை கொள்ளையடிக்க இந்திய பொருளாதார கதவுகளை அகல திறந்து விட்டு 'அழகி போட்டி', 'அடல்ட் சேனல்' என்ற ஆபாச நிகழ்ச்சிகளை பரப்புவதில் தன்னுடைய பங்கை என்றென்றும் துடிப்புடன் செய்து வருகிறது இந்திய ஆளும் கூட்டம்!

இத்தனை நாட்களாக மின்சாரமே இல்லாமலிருந்த பெங்களூரில் தற்போது இந்த போட்டிக்காக இடைவிடாமல் மின்சாரம் கிடைக்க தடபுடலான ஏற்பாடுகள்! 'அழகிகள்' தங்க பல ஆடம்பர மின் விளக்குடன் ஹோட்டல்கள்! இன்னும் வெளிநாட்டவரை மகிழ்விக்க பல ஏற்பாடுகள்!

கே: இந்த போட்டியை எதிர்த்து கர்நாடக மக்கள் போராடுகின்றனராமே?

ப: ஆமாம்! கர்நாடக மக்கள் பல்வேறு வகைகளில் தங்களின் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

மஹிளா ஜவந்ரன் பெண்கள் அமைப்பை சார்ந்த ஐந்து பெண்கள் போட்டி நடந்தால் தற்கொலை செய்து கொள்வதாக தெரிவித்தனர்.

விவசாய அமைப்பை சார்ந்த நஞ்சுண்ட சாமியும் அழகிப் போட்டியை எதிர்த்து அறிக்கை வெளியிட்டார்.

பெண்கள் எழுத்தாளர் சங்கம், மஹிளா ஜாகிருதி, வினா போன்ற அமைப்புகளை ஒருங்கிணைந்த மஹிளா சங்கர்ஷ்டா ஒகுடா என்ற அமைப்பு கடுமையாக 'அழகிப் போட்டியை' எதிர்த்தது. இந்த கடுமையான எதிர்ப்பினால் அழகிப் போட்டியை ஒரு நீச்சல் போட்டியாக கங்கைவேலால் தீவிற்கு மாற்றியுள்ளனர்.

கே: 'உலக அழகி போட்டியை' தமிழகத்தில் நாமும் முறியடிப்பது நம்முடைய கடமை அல்லவா?

ப: ஆம்! மேலை நாடுகள் போடும் எலும்பு துண்டை கவ்விக் கொண்டு ஆளும் கும்பல் 'அழகிப் போட்டி' என்ற சமுதாயத்தை சீரழிக்கும் ஆபாச பண்பாட்டை உயர்த்தி படித்து வருகின்றது. பன்நாட்டு நிறுவனங்கள் இந்திய சந்தையில் கொள்ளையடிக்கவே நடத்தப்படும். இந்த 'உலக அழகிப் போட்டியை' எதிர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையே! சமூக உணர்வு கொண்ட நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவோம்!

-தேன்மொழி.


படிப்பகம்

www.padippakam.com

# விஜயா வழக்கு உணர்த்துவதென்ன?

இன்றைய சமூக அமைப்பில் ஒரு பெண் என்றைக்குமே வளர்க்கப்படுவதில்லை. அவள் குழந்தைப் பருவத்திலிருந்தே திருமணத்திற்கென வார்க்கப்படுகிறாள். 'திருமணமே வாழ்வு' என்ற ரீதியில் பெண்ணை வார்த்தெடுக்கும் நிலவுடமை ஆணாதிக்க சமூக அமைப்பில் பெண்ணுக்கு எதிராக, அநீதிக்குள் அநீதியாக வரதட்சிணை என்ற கொடிய நோய் வளர்ந்து பூதாகரமாய் உருவெடுத்துள்ளது.

மேற்கத்திய நாட்டுப் பண்பாடுகள் இந்தியாவில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து திருமணம் ஒரு அதிவேகமான வியாபாரமாகிவிட்டது. இந்த் திருமண வியாபாரத்தின் ஒரு அம்சமான வரதட்சிணைக்காக பல பெண்கள் பயங்கரமாக கொல்லப்பட்டு வருகின்றனர். இப்படிப்பட்ட திருமண வாழ்விற்காக தன் உயிரையே விலையாகக் கொடுத்தவர் தான் விஜயா என்ற பெண். வரதட்சணைக்காகக் கொல்லப்பட்ட விஜயாவின் கொலை வழக்கில் கொலையாளிகளுக்கு ஆதரவாய் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது மேலும் அதிர்ச்சியை அளிக்கின்றது. விஜயாவின் வழக்கும், நீதிமான்களின் தீர்ப்பும் அழுகிப்போன இச்சமுதாயத்தை வேரோடு தூக்கியெறியப் பட வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.

ஒளரங்காபாத்திலுள்ள நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சார்ந்த அஷ்ருபாவின் மகளான விஜயாவும், மும்பையைச் சேர்ந்த கல்லூரி விரிவுரையாளரான ரவீந்திரனும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். விஜயாவின் பெற்றோர் திருமணத்திற்கு சம்மதித்தாலும், ரவீந்திரனின் பெற்றோருக்கு சம்மதமில்லை. அவர்கள், திருமணத்தின் விலையாக ரூ.25, 000/- வரதட்சிணையாக நிர்பந்திக்க, விஜயாவின் தந்தையோ ரூ.5000/- தான் கொடுத்தார். விருப்பமில்லாமல் வந்த மருமகளை ரவீந்திரனின் பெற்றோர் மிகுந்த கொடுமைக்குள்ளாக்கினார்கள். இதற்கிடையில், கர்பபமுற்ற விஜயா, கணவர் வீட்டாரின் கொடுமை தாங்க முடியாமல் பெற்றோர் வீட்டிற்கு சென்றார். அவருடைய வெளியேற்றத்தைப் பொறுக்க முடியாத கணவன் விஜயாவின் பெற்றோர்களை நம்ப வைத்து, பிரசவத்திற்கு கொண்டு வந்து விடுவதாக வாக்குறுதி கூறி மீண்டும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளான். அழைத்து வந்த விஜயாவை மறுநாளிலிருந்து யாரும் உயிருடன் பார்க்கவில்லை.

தன் கணவனின் பேச்சை உண்மை என்று நம்பி வந்த விஜயாவை, அவளுடைய கொலைகார கணவனும், மாமனாரும் சேர்ந்து கழுத்தை நெறித்து கொலை செய்துள்ளனர். அதோடு அந்த மிருகங்களின் கொலை வெறி அடங்கவில்லை. விஜயாவின் தலையை சவரக்கத்தி கொண்டு அறுத்தும், உடல்பகுதியை ஒன்பது கூறுகளாக்கியுள்ளனர். விஜயாவின் கருப்பையில் வளர்ந்த குழந்தையை



படிப்பகம்

www.padippakam.com

யும் சின்னாப்பின்னப்படுத்தினர் இந்த கயவர்கள். தாங்கள் செய்த பயங்கர கொலையை மறைப்பதற்காக தலையை வீட்டினருகிலே உள்ள குட்டையிலும் உடல் கூறுகளை பெட்டியிலடைத்து உள்ளூர் ரயிலும் போட்டு விட்டனர்.

கணவனால் அழைத்துச் செல்லப்பட்ட விஜயா மீண்டும் பிரசவத்திற்கு தாய்வீடு திரும்பாததால் சந்தேகப்பட்டு அவளின் தந்தை கொடுத்த புகாரின் அடிப்படையில் இவ்வழக்கு மும்பை கூடுதல் குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு வந்தது. கொலைகார குடும்பமே கூண்டோடு கைதானது. இந்த விசாரணை முற்றுப்பெறுவதற்கு முன்பே கொலை வெறியன் மாமனாரும் அவனது மகளும் இறந்து விட்டனர். விசாரணையின் முடிவில் இக்கொலை மனித நேயமற்ற முறையில் செய்யப்பட்டது. எனவே, இது 'ஆபூர்வத்திலும் அபூர்வமான முறை என்ற சட்ட விதிக்கு உட்படுவதால் கொலையாளி இரவீந்திரனுக்கு மரண தண்டனையும் அவனின் தாயாருக்கு ஆயுள் தண்டனையும் அளிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து கொலைகார கும்பல், மும்பை உயர்நீதி மன்றத்திற்கு மனு செய்தனர். இம்மனுவை ஏற்று விசாரித்த உயர் நீதி மன்றம், தாயாரின் குற்றம் நிரூபிக்கப்படாததால் அவளை விடுதலைசெய்தும், ரவீந்திரனின் மரண தண்டனையை உறுதி செய்தும் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து இரவீந்திரன் உச்சநீதி மன்றத்திற்கு மேல் மனு செய்தான். உச்சநீதி மன்றம் கொலைகார இரவீந்திரனுக்கு மரண தண்டனைக் கொடுக்க மறுத்து ஆயுள் தண்டனை மட்டுமே கொடுத்து தன்னுடைய ஆதிக்கத்தை வெளிபடுத்தியுள்ளது.

இப்படிப்பட்ட நீதித்துறையை மக்கள் இன்னும் நம்பினால் ஆயிரம் விஜயாக்கள் கொடுமையாக சிதைக்கப்படும் போக்கு தொடரும். இந்நிலை மாற வேண்டுமெனில், ரவீந்திரன் போன்ற ஆணாதிக்க வெறியர்கள், மக்கள் அரங்கின் முன்பு பகிரங்கமாக தூக்கிலடப்பட வேண்டும். ரவீந்திரன் போன்ற மிருகங்களைக் காப்பாற்ற இன்றுள்ள போலி ஜனநாயக அமைப்பும் அவற்றின் அங்கமான போலி நீதிமன்றங்களும் இருக்கின்றன. எனவே ரவீந்திரன்கள் ஒழிய வேண்டுமெனில் இந்த போலி ஜனநாயக அரசும் அதன் இதர ஏகாதிபத்திய, நிலவுடமை ஆணாதிக்க நிறுவனங்களும் வீழ்த்தப்பட வேண்டும். போலித்தனமாக, சட்ட பூர்வமான அதிகாரத்தை உடைத்து புரட்சிகர பாட்டாளி வர்க்க அதிகாரத்தை நிறுவும் போது தான் விஜயாக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட முடியும்.

ஸ்நேகலாதா



படிப்பகம்

www.padippakam.com

# சாராய வியாபாரியின் காட்டு மிராண்டித்தனம்

இன்று மக்களிடம் ஓட்டுப் பிச்சை கேட்டு ஆட்சி பீடத்திலே அமர்ந் திருக்கும் ஆளும் கும்பலும், அவர் களின் அடிவருடியுமான சாராய வியா பார ரௌடிகளும் அடியாட்களும் கூட்டு சேர்ந்து பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகள் ஏராளம்! அப்பா! கணக்கிடக் கூட முடியாது! இதோ சமீபத்தில் இராஜஸ்தானை சார்ந்த - திபுவுக்கு நேர்ந்த கொடுமையை பார்ப்போம்!

ஜுன்-15 ஆம் நாளன்று ஒரு சாராய காண்ட்ரக்டர் தனக்குப் போட்டியாக யாரோ நாட்டு சாராயம் காய்ச்சுவதாக சந்தேகித்து தலைமை ஏட்டு உட்பட 20 அடியாட்களை வைத்து கிராமத் தையே கதிகலங்க செய்தான். 20 பேரில் எட்டு காமவெறி காட்டு மிராண்டிகள் தபுபாய் என்ற நாற்பது வயது பெண்மணியை பத்து கிலோ மீட்டர் அருகிலுள்ள வயலுக்குள் இழுத்து வந்து அவருடைய கணவன், மகன் முன்பே கொடூரமாக பாலியல் வன்முறை (கற்பழிப்பு) செய்தனர்.

அந்த காட்டு மிராண்டிகளின் வெறித்தனம் பாலியல் வன்முறை செய்ததுடன் நிற்கவில்லை; எட்டு பேரில் ஒரு காமவெறியன் தபுவின் பெண்ணுறுப்பில் கையை விட்டு கருப்பையை வெளியிலெடுக்க முயற்சித்துள்ளான். இதனால் பலத்த காயத்துடன் நான்கு நாட்கள் நினைவற்ற தபுவின் இரவிக்கையை துவைத்தும் உடலை கழுவியும் பாலியல் வன்முறைக்கான ஆதாரங் களை அழித்து விட்டனர் அந்த காமக் கொடூரர்கள்!

எப்போதும்போல் காமவெறி நாய்களுக்கு துணைபோகும் காவல் துறை பாலியல் வன்முறை நடக்கவில்லை என்று முதல் தகவல் அறிக்கையை சமர்பித்தது. காட்டு மிராண்டிகளுக்கு ஆதரவாக மருத்துவ துறையும் தன் பங்கிற்கு அச்சம்பவம் நடக்கவில்லை என்ற மருத்துவ அறிக்கையை சமர்பித்தது.

கொடூரமான பாலியல் வன் முறைக்கு ஆளாக்கப்பட்ட ஆதிவாசி பெண்ணான தபுவிற்கு நீதி அளிக்க மறுத்து இராஜஸ்தான் பி.ஜே.பி அரசு தன்னுடைய சாதி, மத, ஆதிக்க வெறியை வெளிபடுத்தியுள்ளது.

தகவல் 'தி இந்து'.

'பெண் உரிமையின்' எண்ணிக்கையை 2-ஆம் பக்கத்தில் குறிப்பிடும் போது சில பிரச்சனைகளால் தவறுதலாக வெளியிட்டோம். ஆனால் அந்தத் தவறை களைந்து இனி வரும் இதழ்களில் சரியாக வெளியிடுகின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

– ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

# பழி தீர்க்க...

நெருப்பில் மறைந்து போன
குடிசைகள்
கரித்துண்டுகளாய்...
மனித உடல்கள்
வெண்மணியில்
மனுதர்மமாய் மாறிப் போனது
'நீதி' மன்றம்.

ஆபாசத்தை எதிர்த்ததனால்
அடிதடி வழக்கு
பாலியல்
வன்முறையை எதிர்த்ததனால்
கொலை முயற்சி
வழக்கு
நீதிமன்றங்களின் நல்லாசியுடன்

பன்வாரி தேவியே
உம்மை போன்றே
எமது சகோதரிகளும்...
'குடுமிகளின்'
வாரிசுகளாய் போன
நீதிமான்களால்
அவமானப்படுத்தப்பட்டார்கள்
உனக்கு தெரிய
வாய்ப்பில்லை
எம்மை
இழிவுபடுத்தும் கூட்டங்களை
வரிசையில்
கருப்பு அங்கிகளும்
போட்டி போடுகிறது
ஆணாதிக்க வெறித்தனத்தின்
முகங்கள்...
கமிஷன் அறிக்கைகளாக.
'மேல் சாதிகள் தவறிழைக்காத
சமூகப் பொறுப்புள்ளவர்கள்'
'மானபங்கப்படுத்தப்பட்டது
கற்பழிக்கப்படவில்லை'
'சித்திரவதை செய்யப்பட்டது
கொலை செய்யப்படவில்லை'
'கற்பழித்தது உண்மை
அடையாளம் தெரியவில்லை'
'பணம் கிடைக்கும்
என்பதால் மிகைப்படுத்தப்படுகிறது'
இவற்றிற்கு பின்னுமா
இந்த
ஓநாய் கும்பல்களிடம்
நீதி கேட்டு அலைவது
இனியும் நாம்
'பழி தீர்க்க'...
களத்தில் இறங்காவிட்டால்...
நம்மை அழிக்கும்
பாதையில்
அவர்கள்...

தீ. நிரஞ்சனா



படிப்பகம்

www.padippakam.com

# பூலான் தேவி
## திரைப்பட விமர்சனம்

உத்திர பிரதேச மாநிலத்திலுள்ள சம்பல் பள்ளத்தாக்கில் நிலவுகின்ற ஆணாதிக்க மற்றும் நிலவுடமை சமூக அமைப்பினால் மல்லா என்ற ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பூலான் என்ற பெண் ஒருவர் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு கொடூரமான முறைகளில் பாலியல் ரீதியாக சிதைக்கப்பட்டு, சாதிய ரீதியாக ஒடுக்கப்படுகிறாள். அவள் தனது ஒடுக்குமுறையாளர்களையும் ஒடுக்குமுறை சமூகத்திற்கெததிராகவும் சிதைந்த வடிவில் ஆயுதந் தாங்கி வஞ்சம் தீர்த்த கதையே பூலான் தேவியின் உண்மை வாழ்க்கை கதையாகும்.

மாலா சென் என்ற எழுத்தாளரால் எழுதப்பட்ட இவரின் வாழ்க்கை கதையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம்தான் இன்று அனைவராலும் பரவலாக பேசப்படும் 'கொள்ளை ராணி' (பேண்டிட் குயின்) ஆகும். இப்படம் உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. பின்பு உச்சநீதி மன்னறத்தின் தலையீட்டால் தடைநீக்கம் பெற்று வெளியிடபட்டுள்ள இப்படத்தை மீண்டும் தடை செய்யுமாறு பெண்கள் இயக்கங்களும் மனித உரிமை அமைப்புகளும் கோரி வருகின்றன. அதை விட முக்கியமாக பூலான் தேவியே கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளார். இப்படத்தின் விளம்பரதாரர்கள் கூறுவது போல் இப்படம் பெண்களின் பால் உண்மையிலேயே அனுதாபத்தை உருவாக்கி உள்ளதா என்பதையும், இப்படம் குறித்த இதர சர்ச்சைகளையும் இங்கு பார்ப்போம்.

மல்லா இனத்தைச் சேர்ந்த பூலன், வறுமை, குழந்தைத் திருமணம், போலீஸ் மற்றும் தாக்கூர் இனத்தவரால், தொடர்ச்சியான பாலியல் வன்முறைகள், சாதீய அடக்குமுறை என மிருகத்தனமாக ஒடுக்கப்படுகிறாள். வீட்டிலிருந்து கொள்ளைக் கும்பல் ஒன்றினால் கடத்தப்படும் பூலன் அக்கும்பலின் தலைவனால் பலாத்காரம் செய்யப்படுகிறாள். அப்போது அதே கும்பலைச் சேரந்த விக்ரமன் என்ற இளம் வயது கொள்ளைக்காரனால் காப்பாற்றப்படுகிறாள். பூலன் அவனை நேசிக்கிறாள் பின்னர் விக்ரமன் ஸ்ரீராம் என்ற கொள்ளைக் கும்பல் தலைவனால் சுட்டுக் கொல்லப்பட்டு பூலன் பல முறை பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றாள். அத்தோடு மட்டுமன்றி பெஹ்மாய் என்ற கிராமத்திற்கு இழுத்து செல்லப்பட்டு ஊரின் முன்னே நிர்வாணப் படுத்தப்பட்டு நிற்க வைக்கப்பட்டு அவமானம் படுத்தப்படுகிறாள்.

தன் காதலன் விக்ரமனைக் கொன்றவனும், பலமுறை பாலியல் பலாத்காரம் செய்து அவமானப் படுத்தியவனுமான ஸ்ரீராமை பழிவாங்க உறவினர் உதவியுடன் கொள்ளைக் குழுவில் பூலன் சேர்கிறாள். பின்னர் அவள் பெஹ்மாய கிராமத்தில் நடத்திய பழிவாங்குதல் நடவடிக்கைகளினால் உ.பி. மாநிலமே குலுங்குகிறது. இதனைத் தொடர்ந்து அவள் தேடப்பட்டு அரசியல் கைதி அந்தஸ்துடன் அமைச்சரிடம் சரணடைவதாக திரைப்படக் கதை அமைக்கப் பட்டுள்ளது.

பூலன் தேவியின் வாழ்க்கை கதை

படிப்பகம்

www.padippakam.com

என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இத்திரைப்படம் அவர் நிலவுடமை மற்றும் ஆணாதிக்க சமூக அமைப்பின் மிகக் கொடூரமான ஒடுக்கு முறையின் காரணமாக அவற்றை எதிர்த்து ஆயுதந் தாங்கி கொள்ளைக் கூட்டத்தின் தலைவியாக மாறுகிறார் என்ற உண்மை திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளதை புரிந்து கொள்ளமுடியும்.

பூலன் தேவியின் வரலாறையும் இத்திரைப் படத்தையும் பார்த்தவர்களுக்கு அவள் பணத்திற்காக கொலையோ, கொள்ளையோ செய்யவில்லை என்பதும் புரியும். மேலும் பூலன் , ஒடுக்கப்பட்ட பெண்களின் கலகக் குரலாக இருந்ததாலேயே இந்த ஆளும் வர்க்கத்தாரால் அரசியல் கைதியாக அங்கீகரிக்கப்பட்டார். இன்று மக்களின் ஏகோபித்த ஆதரவுபெற்று எம்.பி யாகவும் ஆகியுள்ளார். பூலனின் இந்த பின்னணியையும் இழிவுபடுத்தும் நோக்கில் திரைப்படத்திற்கு "கொள்ளை ராணி" என சேகர் கபூர் பெயரிட்டிருப்பது அவருடைய சாதீய ஆதிக்கத்தையும் ஆண் ஆதிக்க பார்வையையுமே வெளிப்படுத்துகிறது.

இப்படம் முழுவதும், பூலன், ஆபாச வார்த்தைகளை பேசுபவராகவும், மூர்க்கமான பாலியல் உணர்வுகளைக் கொண்டவராகவும் சித்தரிக்கப்படுகிறார் குறிப்பாக பூலன் தன் காதலனிடம் மூர்க்கமான பாலியல் வெறியுடன் நேசத்தை வெளிப்படுத்தும் காட்சி திட்டமிட்டே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு காட்டுவது ஏதோ தற்செயலான ஒன்றல்ல. பின்னாளில் அவர் உயர்சாதியினரான தாக்கூர் இனத்தவரால் பாலியல் ரீதியான சிதைக்கப்படுவதற்கான மறைமுகமாக வர்ணாஸ்ரம நியாயங்களைக் கூறுவதாக உள்ளது.

அதாவது தலித் மக்களின் ஒடுக்கு முறைகளுக்கும், அவர்களின் துயர்களுக்கும், அவரின் இழிவான பிடிப்பும், நடவடிக்கைகளுமே காரணம் என்று வர்ணாஸ்ரம கோட்பாடுகள் நியாயப் படுத்தி வருகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டே நாடெங்கிலும் காலங்காலமாக ஆண்டைகளும் உயர் சாதியினரும் தலித் பெண்ணை உடமையாகக் கொண்டு அனுபவிக்கும் கொடூரமான உரிமையும் இருந்து வருகிறது. இந்த உரிமையை சேகர் கபூர் கில்லாடித்தனமான முறையில் தாக்கூர்களுக்கு வழங்கியுள்ளார். மேலும் படத்தில் தாக்கூர்கள் மூர்க்கமான பாலியல் உணர்வு கொண்ட தலித் பெண்மீது அடக்கு முறையை ஏவி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி அவளை ஒடுக்கலாம் என மறைமுகமாக கூறுகிறார்.

படம் முழுவதும் வித விதமான பாலியல் வன்முறைகளும் பலாத்காரங்களும் நேரடியாக சித்தரிப்பதன் மூலம் சேகர் கபூர் ஆண் பார்வையாளர்களின் வக்கிர உணர்வுகளுக்குத் தீனி போடுகிறார். மறுபக்கம் பெண்கள் மத்தியில் பெண்களின் எழுச்சியை அடக்க இவ் வாணாதிக்க சமூகம் பாலியல் வன்முறையை கையாளத் தவறாது என்ற கருத் தாக்கத்தையும் நிலை நிறுத்துகிறார். சர்வதேச ரீதியில், பூலனின் உடலை வணிகமயமாக்கி பாலியல் வக்கிரங்களை கலை என்ற பெயரில் விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்க சினிமா என்ற மீடியாவை கையாளப் புதிய வழிகளைக் கற்றுத் தந்துள்ளார். இன்று அதிவேகமாக வளர்ந்து வரும் ஆபாச சீரழிவு பண்பாட்டை கட்டவிழ்க்கும் விதத்தில் இப்படத்தை தயாரித்துள்ளார். இதன் மூலம் கபூர் தன்னை மேற்கத்திய பண்பாட்டின் தரகராக வெளிப்படுத்தி



படிப்பகம்

www.padippakam.com

யுள்ளார். இவரின் இந்த கீழ்த்தரமான முயற்சிக்கு நீதிமன்றமும் தன் பங்கிற்கு தடையை நீக்கி ஆதரவு அளித்துள்ளது.

இப்படம் பிபிசியின் 4-வது அலை வரிசைக்காக தயாரிக்கப்பட்டதாகும். சர்வதேசப் பார்வையாளருக்காகத் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் காட்டு மிராண்டிகளாகவும் நாகரீக மற்றவர்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளனர். மேற்கத்திய நாடுகளின் நிறவெறி, இனவெறி மற்றும் பெண் விரோத போக்குகளின் ஒரு பகுதி யாகவே இப்படம் அமைத்துள்ளது. என்பதும் இங்கு குறிப்பிடத்தகுந்தது.

மொத்தத்தில் பாலியல் ரீதியாக சிதைக்கப்பட்டு சாதீய ரீதியாக ஒடுக்கப் பட்ட ஒரு பெண்ணின் உலவியல் பாதிப்புகளை வெளிப்படுத்த இப்படம் தவறியதை பூலன் தேவியே சுட்டிக் காட்டியுள்ளார். தனது அந்தரங்க வாழக்கையைச் சிதைத்து சித்தரித்ததற் கும் தன் கண்ணியத்தையும் சுய மரியாதையையும் கௌரவத்தையும் அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளதாக கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இவருடைய இந்த கண்டன குரலினால் இன்றைய ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஆணாதிக்க சிந்தனைக் கலை என்ற பெயரில் சினிமா என்ற பிரமாண்டமான மீடியா மூலம் நிலை நிறுத்துபவர்களாக கபூரும், பேஷயும், பச்சனும் அம்பலப்பட்டு நிற்கின்றனர். இவர்களை எதிர்ப்பது நமது கடமை யாகும்.

மேலும் பாலியல் சுரண்டலை வணிக மயமாக்குவதே இன்றைய சந்தைப் பொருளாதாரத்தின் உச்சகட்ட அம்ச மாகவுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே, உண்மைக்கதை என்ற பெயரில் இப் படத்தில் ஆபாச பண்பாட்டு சீரழிவானது வெளிப்படையாக்கப் பட்டுள்ளது. பாலியல் மற்றும் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட பெண் ஒருவரின் மீதான அனுதாபத்தையும் மனித நேயத்தையும் கேவலமான முறையில் பயன்படுத்தி ஆதாயம் தேடுகிறது இப்படம். எனவே எல்லா வகையிலும் இப்படம் தடை செய்யப்பட வேண்டு மென்பதில் ஜனநாயக உணர்வுள்ள எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

***- மருதாயி***

**அன்பு சகோதரிகளே!**
**'பெண் உரிமை'யைப் படியுங்கள்**
**உங்கள் தோழிகளுக்கு**
**அறிமுகப்படுத்துங்கள்**
**விமர்சனங்களையும்**
**படைப்புகளையும்**
**தவறாமல் அனுப்புங்கள்**

***- ஆசிரியர் குழு***


படிப்பகம்

www.padippakam.com

# எதிர்க் காற்று

தமிழக சட்டப் பேரவையில் ஆபாச எதிர்ப்பு முழக்கமிட்டு, துண்டுப் பிரசுரங்கள் வீசினார்கள் புரட்சிகரப் பெண்கள். சட்டப் பேரவை விதித்த சிறைத்தண்டனைக்கும் அப்பால் சட்ட விதிகளை மீறி அவர்கள் சித்திரவதைப் படுத்தப்பட்டார்கள்.

அவர்கள் போட்டது முழக்கம்,
வீசயது பிரசுரம் -
மேல்மாடத்திலிருந்து.
மயிலிறகு போல் சில
மென்காற்றில் ஆடி ஆடி
உதிர்ந்தன.
மன்னர்கள் அமர்ந்த
சிம்மாசனம் மீதொன்று,
செங்கோல் மீதொன்று,
ஒளிவட்டம் சுடரும் அவர்கள்
தலைமீதொன்று.
உதிர்த்தது பூஞ்சிறகோ!
முழங்கியது ஆபாச எதிர்ப்போ!
முழக்கமும் முன்னை வரலாற்றின்
மூத்த தமிழிலோ!
என்றாலும்,
அரசவையில் வீச
அதிகாரம் தந்தது யார்?
'சட்டமும் நீதியும்'
நாய்கள் தாண்டிவந்தது எப்படி?
''இறங்கியது பிரசுரம் அல்ல,
சம்மட்டி'' என்றார்.
காலகாலமாய் வீசும் கவரி,
காது மடலடியில் புகழ்க் காற்று,
காலடியில் தெண்டணிடும் தலைகள்
இத்தனையும் தரும், இன்னும் தரும்
அதிகார பீடத்தை கேள்வி எழுப்பும்
பெண் புலிகள் - ''யார் இவர்?''
முன்னம் ஒரு மேன்மாடம்
கையில் காதலியர்
கடைக்கண் மயக்கத்தில் சோழர்.
உழவர் பெருமக்கள்
உதிரம் தீப்படித்து,
உப்பரிகைக் கொழுப்புகள் உருகின. குகை
இருட்டுக் கருவறை,
கோபுரங்கள் இடிந்தன
அதிகார பீடம் கேட்டது ''யார் இவர்?''
திரிபுரம் எரித்த சிவன்
நெற்றிக்கண் திறந்த திமிரை,
பகுத்தறிவுப் பாட்டன் நக்கீரன்,
பாண்டியன் பேரவையில்
'சுண்டிய' வேளையில்,
பீடம் கேட்டது ''யார் இவர்?
தேக உடலெங்கும்
வெள்ளைப் பெருநோய்
தெருக்கோலம் போகவோ?
சுவாசக் குழாயில்
சுதந்திரக் காற்று ஊற்றி,
பிரசுரம் வீசிய பகத்சிங், சுகதேவ் -
பரங்கிப்பீடம் கேட்டது '' யார் இவர்?''
வீசியது பூஞ்சிறகு அல்ல,
வீசியவர் பூங்கொடியரும் அல்லர்
''யார் இவர்?''
'அணைய நிழலில்லா
ஆகாயத் தந்திமரம்,
தாகம் தீர்க்கத் தராத கானல்,
மூச்சுக் குழாய் பருக
துளிக் காற்றும் இல்லா வானம்,
ஆபாச மேன்மாடம்
அதிகாரப் பேரவை
இத்தனையும் நீர்.
அவர்.......
காலத்தை வழி நடத்தும்
எதிர்க்காற்றின் சரித்திரம்.

-சூரிய தீபன்



படிப்பகம்